Registered as a News Paper
பொழிவு: 28
குவிப்பு: 11
பக்கங்கள்: 12
விலை: 50/-
கார்த்திகை:2023
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

## உரோமையில் இலங்கை ஆயர் பேரவையினர் திருத்தந்தையுடன் சந்திப்பு



இலங்கை நாட்டிலுள்ள அனைத்து மறைமாவட்டங்களின் ஆயர்களும் துணைஆயர்களும் உரோமை சென்று நவம்பர் 10,2023 வெள்ளிக்கிழமை அன்று வத்திக்கானில் சந்திப்பு மண்டபத்தில் உரோமை நேரம் காலை 10.00 மணியளவில் திருத்தந்தையை சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பானது 'ad limina visit' என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, ஒரு நாட்டின் அனைத்து ஆயர்களும் ஒன்று சேர்ந்து உரோமையில் திருத்தந்தையையும் வத்திக்கான் அதிகாரிகளையும் சந்திப்பதும் தங்களுடைய மறைமாவட்டத்தைப் பற்றிய ஐந்தாண்டு அறிக்கையை (quinquennial report) சமர்ப்பிப்பதும் கட்டாயமாகும்.

இந்த ஐந்தாண்டு அறிக்கையில் ஒரு மறைமாவட்ட ஆயரினது நடவடிக்கைகளும் அத்தலத் திருஅவையின் திருவழிபாடு மற்றும் அருளடையாள வாழ்வு, கத்தோலிக்க கல்வி, மறை அறிவிப்பு, சமூக தொடர்பாடல், திருஅவையின் சமூக படிப்பினைகள் மற்றும் மறைமாவட்டத்தின் நிதி நிலைமை பற்றிய விடயங்களும் உள்ளடங்கியிருக்கும். அத்தோடு அவர்கள் உரோமையின் புனித பேதுரு, பவுல் கல்லறைகளில் செபிப்பதும் மேலும் புனித யோவான் - லாத்தரன், புனித மரியன்னை (St. Mary Major) பெருங்கோவில்களில் இறைவேண்டல் செய்வதும் வழக்கமாகும்.

→03

## செப ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு – 2024



உலகத் திருஅவையானது யூபிலி ஆண்டாகிய 2025ஐ நோக்கி பயணமாகும் செயற்திட்டத்தை வரைந்து அதற்குரிய தயாரிப்பை மேற்கொள்ளும் நிலையில் தலத்திரு அவையாக மன்னார் மறைமாவட்டம் 2024ஆம் ஆண்டை ஒரு சிறப்பு தயாரிப்பு செப ஆண்டாக அறிக்கையிட்டு மேய்ப்புப்பணித் திட்டங்களை தீட்டும் திட்டமிடல் மாநாட்டை நடத்தி முடித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 23-25 வரையான மூன்று நாள்களை உள்ளடக்கி நடைபெற்ற இத்திட்டமிடல் மாநாடு மன்னார் மறைமாவட்ட குடும்ப பொதுநிலையினர் பணி நிலையத்தில் இடம் பெற்றது. மாநாட்டின் கருப்பொருளான 'செபம்' என்பதை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்கள் அறிவித்து மாநாட்டை தொடங்கி வைக்க முதன்மை குரு அருட்பணி P. கிறிஸ்துநாயகம் அவர்கள் பங்கேற்பாளர்களை வரவேற்று உரையாற்றினார். பின்னர் மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுவின் செயலர் அருட்பணி அ.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அவர்கள் நடப்பாண்டிற்கான மேய்ப்புப்பணித் திட்டங்களின் மீளாய்வினையும் 2025 யூபிலி ஆண்டிற்கான அறிமுகத்தையும் 2024ஆம் செப ஆண்டு கருப்பொருள் விளக்கத்தையும் வழங்கினார்.●

## மன்னார் மறைசாட்சிகளின் புனிதர் நிலை அறிவிப்பிற்கான முன்நகர்வுகள்



மன்னார், தோட்டவெளி – பட்டித்தோட்டப் பகுதிகளில் இற்றைக்கு 480 வருடங்களுக்கு முன்னதாக திருமறையாம் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை தழுவிக் கொண்டதற்காக படுகொலை செய்யப்பட்ட 600இற்கும் மேற்பட்ட மறைசாட்சிகள் திருப்பீடத்தினால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கான இறைவேண்டல்களும் இதர நடவடிக்கைகளும் பல்லாண்டுகளாக மன்னார் மறைமாவட்டத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த நவம்பர் 12ம் திகதி, ஆண்டின் பொதுக்காலத்தின் 32வது ஞாயிறு திருப்பலி நிறைவில் மன்னார் மறைமாவட்டம் முழுவதிலும் ஆலயங்களில் இதற்கென தயார்ப்படுத்தப்பட்ட செப அட்டையிலுள்ள மன்னார் மறைசாட்சிகளைப் புனிதர் நிலைக்கு உயர்த்த வேண்டிய செபமானது சொல்லப்பட்டது.

அதேவேளையில் 'ad limina' சந்திப்பிற்காக உரோமை சென்றிருந்த மன்னார் மறைமாவாட்ட ஆயர் அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்த போது மன்னார் மறைசாட்சிகள் குறித்த ஆவணங்கள், ஆதாரங்கள் போன்றவற்றை வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களிடம் கையளித்துள்ளார். மன்னார் மறைசாட்சிகள் திருப்பீட அங்கிகாரம் பெற்று புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட தொடர்ந்தும் இறைவேண்டல் செய்வோம்.●

"மன்னார் மறைமாவட்டம் மறைசாட்சிகளின் பூமி"

# மன்னா
## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

### எம் அரசு விண்ணரசே!

உலக வரலாற்று ஏடு பற்பல பேரரசுகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பதிவு செய்து கனத்துப்போயுள்ளது. மொங்கோலியப் பேரரசு, எகிப்தியப் பேரரசு, பாபிலோனியப் பேரரசு, கிரேக்க – உரோமானியப் பேரரசுகள், மொகலாயப் பேரரசு, ஆங்கிலேயப் பேரரசு என ஆதிக்கம் செலுத்திய அனைத்துப் பேரரசுகளும் அடிதகர்ந்து போனதே வரலாறு சொல்லும் உண்மை. இவ் அனைத்து பேரரசுக் கட்டுமானத்திற்கான விலைகள் பல இலட்சக்கணக்கான மனித உயிர்களும் பொருண்மிய அழிவுகளும் பண்பாட்டுத் தகர்வுகளுமேயாகும். ஆயுதங்கள் பேச அமைதி பலியாகும். இன்றைய அதி நவீன காலத்தில் வல்லரசுகளாக தம்மை தகவமைத்துக் கொண்ட நாடுகளும் வல்லரசுப் பாதையில் பயணிக்கும் நாடுகளும் தம் நலன் சார்ந்து நடத்தும் உலக நாடகத்தில் சாமானியர்களின் நிலை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நிலையில் நிலைகுலைந்துள்ளது. உலக அமைதிக்கான முயற்சியில் ஐக்கியநாடுகள் சபை சாண் ஏறி முழம் சறுக்கும் நிலையிலேதான் உள்ளது.

இத்தகைய கால நதி சூழலுள் நின்று கரை தேடும் நமக்கு இறையாட்சி எனும் பேரரசுக் கலங்கரை தீபமாக காணப்படு -கின்றது. திருவழிபாட்டு ஆண்டின் சிகரமாக கிறிஸ்து அரசர் பெருவிழாவை கொண்டாடியுள்ளோம். மாவீரன் நெப்போலியனின் மமதை, பெல்ஜியம் நாட்டிலுள்ள 'வோட்டலூ' பகுதி பெரும் சமரில் சரிந்தொழிந்தது. கெலேனா தீவுச் சிறையில் வாடிய அவனின் வார்த்தைகள் பின்வருமாறு அமைகிறது. “அதிகாரம், மகிமை எல்லாம் வெறும் புகை. நான் மகான் என அழைத்த அலெக்சாண்டரின் எலும்புகளைக் கூட காணமுடியவில்லை. என்னையே மகான் என்றேன். சிறையில் வாடுகிறேன். நாசரேத்து ஊர் இயேசு இறந்து பல்லாண்டுகள் ஆன பின்னும் அவரது அரசு மறையவில்லை. அலெக்சாண்டரும் நானும் ஆயுத பலத்தால் ஆட்சி செய்தோம். எங்கள் ஆட்சி நிலைபெறவில்லை. ஆனால் கிறிஸ்து அன்பினால் ஆட்சி செய்கிறார். அவரது அரசு என்றும் நீடிக்கும்”.

இயேசுக் கிறிஸ்துவின் உண்மையான, வாழ்வுதருகின்ற, புனிதமும் அருளும் கொண்ட, நீதியும் அன்பும் அமைதியும் கொண்ட அரசிலே உறுப்புரிமை பெறுவதே நமது முதன்மையான அவாவாகட்டும். அமெரிக்க வல்லரசு, ரஷ்ய வல்லரசு, சீன வல்லரசு என உலக நடப்பிலே அவைகள் பற்றிய அரசியல் பேச்சுகளை அலசினாலும் ஆண்டவனரசிற்குரிய தேடலை கூர்மைப்படுத்துவதும் அப்பாதையை அகலப்படுத்துவதுமே அவசியமாகும். எல்லைகளை அடிப்படையாக கொண்ட மண்ணுலக அரசை விட மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்ட விண்ணரசு நமது கவனத்தை ஈர்க்கட்டும். மக்களை பலியாக்கி தங்களை வாழவைக்கும் மண்ணக அரசியல்தலைவர்களை பின்தள்ளி தன்னை பலியாக்கி மீட்பை வழங்கிய இயேசுவை பற்றிப்பிடிப்போம்.

புதியதொரு திருவழிபாட்டு ஆண்டானது திருவருகைக்கால முதல் ஞாயிறோடு ஆரம்பமாகிறது. “அத்வென்திஸ்” என இலத்தீன் மொழி சுட்டும் கிறிஸ்துபிறப்பு தயாரிப்புக்காலம் திருஅவையின் நம்பிக்கையூட்டும் காலமாகும். ஆண்டவரின் மறுவருகையை “மாரனாத்தா (1கொரி 16:22) என்னும் அரமாயிக் சொல்லாடலால் புனித பவுல் அழைக்கிறார். “ஆண்டவரே வாரும்” என, ஆண்டாண்டுகளாக திருவருகைக்கால நம்பிக்கை முழக்கமாக நாம் அறிக்கையிட்டு வருகிறோம். “கருணைக் கடலே வா” எனப் பாடி நமக்குள் புதிய நம்பிக்கையை தட்டி எழுப்புகிறோம். எதிர்வரும் காலத்தை எழுச்சியோடு ஏற்றுக்கொள்ள கிறிஸ்து பிறப்புக்காலம் நமக்கு மாபெரும் ஆசீர்வாதமாக அமையப்பெறும். ஆண்டவரின் முதல் வருகையை அவரது மானிட பிறப்புப் பெருவிழாவை நினைவூட்டி மகிழ்வுடன் கொண்டாடுவது, அவரின் மறுவருகைக்காக நம்பிக்கையுடன் காத்திருப்பது என இரண்டு காரணங்களை திருஅவை திருவருகைக்காலத்தில் சிறப்பிக்கின்றது.

இறைவாக்கினர் மெழுகுதிரி என பொருள்படும் நம்பிக்கையின் திரியை பற்றவைத்து பெத்லகேம் மெழுகுதிரியாகிய அன்பின் திரியை அடுத்து ஏற்றி இடையர் மெழுகுதிரியெனப்படும் மகிழ்ச்சியின் திரியை தொடர்ந்து ஏற்றி வானதூதர் மெழுகுதிரி என சொல்லப்படும் அமைதியின் திரியை அழகாக ஏற்றி 'கடவுள் நம்மோடு' அதாவது இம்மானுவலாகிய இறைமகன் இயேசுவை உலகின் ஒளியாக, தூய்மையின் வடிவாக, நன்மையின் நிறைவாக, நானில மீட்பராக ஏற்று, ஏற்றிக் கொண்டாடுவோம்.

நிறையாசீரின் திருவருகைக்கால வாழ்த்துகள்!

**என்றும் கிறிஸ்துவில்**

**அருட்பணி. சூ. டக்ளஸ் லோகு - மன்னா பதிப்பாசிரியர்**

# மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து திருத்தொண்டராக மூவர்



மறைசாட்சிகளின் மறைமாவட்டம் மன்னார், இறை அழைத்தலின் விளைநிலமாகவுள்ளது. அதன்படி மூன்று திருத்தொண்டர்களை இறையழைப்பின் பயனாக இம்முறை பெற்றுள்ளது எமது மன்னார் மறைமாவட்டம். கடந்த 26.10.2023 வியாழக்கிழமை மன்னார் மறைமாவட்ட புனித செபஸ்தியார் பேராலயத்தில், இறையியல், மெய்யியல் கல்வியை முறைப்படி நிறைவுசெய்த அருட்சகோதரர்கள் சிம்சன் குருஸ், யதுஸ்ராஜ், விமல் றோய் ஆகியோர் பணிக்குருத்துவத்தின் திருத்தொண்டர் நிலைக்கு மன்னார் மறைமாவட்ட ஆயரினால் திருப்பொழிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் முறையே வங்காலை புனித ஆனாள், எழுத்தூர் புனித அடைக்கல அன்னை, சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலய பங்குகளைச் சேர்ந்தவர்கள். திருத்தொண்டராக அருட்பொழிவு பெற்ற இவர்களை 'மன்னா' வாழ்த்துவதோடு இவர்களின் வாழ்வும் பணியும் வளம்பெறவும் பணிக்குருத்துவ நிலை நோக்கிய தயாரிப்புப் பயணம் சிறக்கவும் ஆசிக்கின்றோம்.●

# மன்னாரில் கலாபூஷணம் விருதாளர் இருவர்



வங்காலையைச் சேர்ந்த திருமதி. பெப்பி விகரர் லெம்பேட் அவர்கள் கடந்த ஒக்டோபர் 11ம் தேதி கொழும்பு மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற 38வது அரச விருது விழாவின் போது கலாபூஷணம் விருதைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்விற்கு இலங்கை ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தலைமையேற்றிருந்தார்.

பல்கலைக்கழக பட்டதாரியான ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி பெப்பி மதுரநாயகி விக்ரர் லெம்பேட் அவர்கள் 15 வருடங்கள் ஆசிரியராகவும் 11 வருடங்கள் தமிழ்பாட ஆசிரிய ஆலோசகராகவும் 08 வருடங்கள் தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் கல்விப்பணி செய்துள்ளார். அத்தோடு தமிழ் மொழிக்கு வளம் சேர்க்க 07 நூல்களை எழுதி வெளியிட்டு உள்ளார். வங்காலைப் பங்கின் மறையாசிரியராக கடந்த 45 ஆண்டுகள் சிறப்பாக பணிபுரிந்து வருகின்ற இவர் ஆளுமைமிகு சிறந்த பொதுநிலையினருள் ஒருவராவார். ●



கலைவாழ்வுப் பணியில் 53 வருடங்களாக பயணிக்கும் திரு. அந்தோனி மரியநாயகம் அல்மேடா அவர்கள் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்ற அரச விருது விழாவின் போது ஜனாதிபதியின் “கலாபூஷணம்” எனும் அரச உயர் விருதை பெற்றுக்கொண்டார். பறப்பாங்கண்டல் கிராமத்தை பிறப்பிடமாகவும் மன்னார் - சின்னக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மன்னார் கலையருவி கலைஞர் மன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார்.

➡ 03

## துயர் பகிர்கிறோம்...

### அருட்பணியாளர் எஸ்.ஜே.இராஜநாயகம் இறைவனடி சேர்ந்தார்



யாழ் மறைமாவட்ட மூத்த குருக்களில் ஒருவரான அருட்பணியாளர் எஸ்.ஜே. இராஜநாயகம் அடிகளார் தனது 75ஆவது வயதில் கடந்த 06.11.2023 அன்று இறப்பெய்தினார். யாழ் மறை மாவட்டத்தின் 'அகவொளி' என்னும் குடும்ப உளவள நிலையத் -தின் தராதரம் உயர உழைத்த அதன் முன்னாள் இயக்குநராகிய இவ் அருட்தந்தை மன்னார் மறைமாவட்டம் யாழ்ப்பாண மறை மாவட்டத்தில் இருந்து தனியாக பிரிக்கப்பட்டு உருப்பெற்ற போது மன்னார் மறைமாவட்டத்திற்கென சிலகாலம் பணியாற்ற விருப்பத் தெரிவுகொடுத்து இங்கு பணியாற்றிய அருட்பணியாளர்களில் ஒருவர் என்பதை நன்றியோடு நினைவுகூர்கின்றோம்.

மரணித்த அருட்தந்தை எஸ்.ஜே. இராஜநாயகம் அவர்களை அஞ்சலித்து இறை பேரமைதியில் அவர் இளைப்பாற மன்னார் மறைமாவட்டம் இறைஞ்சி நிற்கின்றது●

முள்ளிக்குளம் புனித விண்ணேற்பு மாதா கோவில் பங்கைச் சேர்ந்த திருமதி மேரி தெரேசா அவர்கள் தனத 72 ஆவது வயதில் கடந்த 11.11.2023 அன்று சனிக்கிழமை காலமானார். இத்தாயார் அமல மரித்தியாகிகள் துறவற சபையின் அருட்பணியாளர் சுவின் றெவ்வல் அவர்களின் அன்புத் தாயார் ஆவார். 13.11.2023 திங்கட்கிழமை இத்தாயின் குருமகன் அருட்பணி சுவின் அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றிய இரங்கல் திருப்பலி மற்றும் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அவர்களின் இறுதி நல்லடக்க வழிபாட்டைத் தொடர்ந்து இறந்த தாய் திருமதி மேரி தெரேசா அவர்களின் உடல் முள்ளிக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தாயின் இழப்பில் துயருற்றுள்ள அருட்பணி. சுவின் அடிகளாருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை கூறுகின்றோம்.●

வங்காலை கிராமத்தைச் சேர்ந்த திருமதி. செபஸ்ரியம்மா சோசை அவர்கள் தமது 85வது வயதில் காலமானார். இவர் அருட்பணி A.லின்ரன் லெம்பேட் (OFM), அருட்சகோதரி மேரி பெர்னடேத் லெம்பேட்(SHS), அருட்சகோதரி மேரி மெக்ரலின் லெம்பேட்(F.M.M) ஆகிய துறவிகளினதும் ஏனைய ஐந்து பிள்ளைகளின் அன்புத்தாயாருமாவார்.

தனது மூன்று பிள்ளைகளை துறவிகளாக இறைபணிக்கு அர்ப்பணித்த இத்தாயின் இறைநம்பிக்கை, பயபக்தி நிறைந்த எளிமையான வாழ்வு நமக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அருட்சகோதரிகள் மேரி பெர்னடேத், அருட்சகோதரி மேரி மெக்ரலின் ஆகியோர் முறையே நமது மன்னார் மறைமாவட்டத்தின் தோட்டவெளி மற்றும் விடத்தல்தீவு பங்குகளிலுள்ள கன்னியர் மடங்களிலிருந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தாயாரின் குருமகன் அருட்பணி லின்ரன் அவர்கள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்த இரங்கல் திருப்பலி மற்றும் குருமுதல்வர் அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளாரின் இறுதி நல்லடக்க வழிபாட்டுடன் 20.11.2023 அன்று வங்காலை சேமக் காலையில் இவரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. சகோதர சகோதரிகளான துறவிகள் மூவருக்கும் குடும்பத்தவர் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்ந்து ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.●

# தவறுக்காக வருந்துகிறோம்

எமது ஒக்டோபர் மாத பத்திரிகையில் இரண்டு விடயங்கள் தவறுதலாக பதிவிடப்பட்டுவிட்டன. முன்பக்க செய்திகளில் ஒன்றான மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து அமலமரித் தியாகிகளுக்கு இரண்டு புதிய குருக்கள் என்னும் செய்திப் பதிவானது மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து அமலமரித் தியாகிகள் மற்றும் இயேசு சபைக்கு புதிய குருக்கள் எனவும், அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்திற்கு ஒருவரும் இயேசு சபைக்கு ஒருவருமாக இரண்டு திருத்தொண்டர் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் திருத்தப்படுகின்றன.

மேலும் 02ம் பக்கத்தில் கரோல் பாடல் போட்டி – 2023 தொடர்பான செய்தியில் மன்னார் மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் மேற்படி போட்டிகள் நடைபெறும் தேதிகள் முன்பின்னாக மாறி பதிவிடப்பட்டுள்ளன. இத்தவறுகளுக்காக வருந்துகின்றோம்.

**- பதிப்பாசிரியர் -**

# மன்னார் மறைமாவட்டசெய்திகள்

## சுவிட்சலாந்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை சந்திக்க உரோமை சென்ற இலங்கை ஆயர் பேரவையினர் அச்சந்திப்பை நிறைவேற்றியிருந்தனர். அதன் பின்னர் மன்னார் ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்கள் சுவிட்சலாந்து சென்று ஒரிரு நாள்கள் சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் செயற்பாடுகளில் கலந்து கொண்டார். கடந்த 18.11.2023 சனிக்கிழமையன்று சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க பணியகத்தினால் நடத்தப்பெற்ற பணியாளர் தியான இறுதியில் இடம்பெற்ற திருப்பலியை ஆயர் அவர்கள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

அத்திருப்பலியானது சுவிஸ் தேசத்தின் ஒல்ரன் மாநகரின் புனித மரியன்னை கோவிலில் நிறைவேற்றப்பட்டது. அத்தோடு அதற்கு மறுநாள் 19.11.2023 ஞாயிறு சுவிஸ் - சூரிச் மாநகரில் அப்பகுதி வாழ் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கு திரு இருதய ஆண்டவர் கோவிலில் ஞாயிறு திருப்பலியை ஆயர் அவர்கள் நிறைவேற்றி இறையாசீர் அளித்தார்.

மேற்படி திருநிகழ்வுகளை சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க பணியக இயக்குநர் அருட்பணி. ஆ.யூ.முரளிதரன் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.●

## மருங்கோடியில் மூதாளர் மதிப்பளிப்பு நிகழ்வு





பள்ளமடுவில் அமைவுற்றுள்ள மூதாளர் அமைதியகமாகிய 'மருங்கோடி'யில் முதியவர் தினம் கடந்த ஒக்டோபர் 04ஆம் திகதி நடைபெற்றது.

மாந்தை மறைக்கோட்ட முதல்வரும் விடத்தல்தீவு பங்குத் தந்தையுமான அருட்பணி லக்கோன்ஸ் பிகிறாடோ அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு 'ஒரு பானை' எனும் பெயரில் சமூக பணியாற்றும் தென்னிந்திய திருஅவை (CSI) நிதியத்தின் அனுசரணையில் இடம்பெற்றது. இந்நிதியத்தின் பணியாளர்களான பாதிரியார் அனுகூலன், திரு. நந்தகுமார், திருமதிகள் அனுஷா, லில்லி, றோகினி ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மேற்படி நிதியத்தினால் மூதாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அத்தோடு இந்நிகழ்வில் ஆயுள்வேத மருத்துவர் திரு பெத்தும் பெர்னாண்டோ அவர்களும் கலந்து கொண்டிருந்தார். 'ஒரு பானை' நிதிய பணியாளர்களுக்கு, மருங்கோடி பணியாளர்களாலும் பங்குதந்தையினாலும், ஆயுள்வேத மருத்துவராலும் நிகழ்வின் இறுதியில் நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மதிய விருந்துபசாரத்துடன் இந்நிகழ்வு நிறைவுற்றது.●

## முருங்கன் மருத்துவமனையில் திருஇதய ஆண்டவர் சிற்றாலயம்



முருங்கன் ஆதார மருத்துவமனையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட திருஇதய ஆண்டவர் சிற்றாலயத்தின் அர்ச்சிப்பு விழா கடந்த ஒக்டோபர் 30ஆம் தேதி 2023 அன்று மாலை 05.00 மணிக்கு இடம் பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் இச்சிற்றாலயம் அர்ச்சிப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அடிக்கல் நடப்பட்டு, சிறிது சிறிதாக கட்டப்பட்டு பல வருடங்களாக கிடப்பில் போடப்பட்ட இச்சிற்றாலய கட்டுமானம் முதன்மை குரு P. கிறிஸ்துநாயகம் அவர்களின் முயற்சியிலும் ஆயர் இல்லம் மற்றும் புலம் பெயர் சுவிஸ் கொடையாளியின் நிதி வலுவூட்டலிலும் விரைவாக முழுமை பெற்றது. சிற்றாலயத்தில் உள்ள அருட்பொருள்கள் முருங்கன் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் மற்றும் பணியாளர்களின் பணப் பங்களிப்பின் அடையாளங்களாக அமைவுற்றுள்ளன.

மன்னார் ஆயரினால் தலைமையேற்கப்பட்ட இச்சிற்றாலய அர்ச்சிப்பு திருப்பலியில் குருமுதல்வர், ஆயரின் செயலர் உட்பட முருங்கன் பங்கின் இன்னாள் முன்னாள் பங்குத்தந்தையர், அயல் பங்குத்தந்தையர், கார்மேல் சபை அருட்சகோதரிகள், மருத்துவதுறை சார்ந்தோர், பொது மக்கள் என பலர் பங்கேற்றனர்.●

## புனித வின்சன் டி போல் சபை திருவிழாவும் மாதாந்த பொதுக்கூட்டமும்



மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டி போல் சபையினரது வருடாந்த திருவிழாக் கொண்டாட்டமும் மாதாந்த பொதுக் கூட்டமும் இயக்குநர் அருட்பணி. S. பிரான்சிஸ் மரி டி கோல் அவர்களின் வழிநடத்தலில் கடந்த 08.10.2023 ஆம் தேதியன்று மறைமாவட்ட குடும்ப நலப் பணியக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P. கிறிஸ்துநாயகம் அடிகளார் கலந்து கொண்டு விழாத்திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றினார். இந்நிகழ்வில் புனித வின்சன் டி போல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மையப் படுத்திய சிறப்புரையானது இச்சபையின் இலங்கைக்கான பணிமுதல்வர் அருட்பணி. மரிய கிளைன் அவர்களால் வழங்கப்பட்டதோடு அவரின் முயற்சியால் உருவான "புனித வின்சன் டி போல் நவநாள் செபங்களும் மன்றாட்டு மாலையும்" என்னும் சிறிய நூலும் வெளியிடப்பட்டது.

குருமுதல்வர் அருட்பணி P. கிறிஸ்துநாயகம் அடிகளார் தனது உரையில், ''வெளிநாட்டு நிதி உதவிகள் மட்டுமன்றி உள்நாட்டிலும் நமது முயற்சியில் நிதியை சேகரித்து தேவையில் உழல்வோருக்கு உதவ முன்வர வேண்டும்; நாம் வாழும் சூழமைவில் ஒருவர் மற்றவருக்கு உதவுகின்ற மனப் பக்குவம் மேம்பட வேண்டும்'' என எடுத்துரைத்தார்.

புனித வின்சன் டி போல் சபை பங்கு அங்கத்தவர்களால் தமது பங்கு அன்பளிப்புகள் திருப்பலி காணிக்கையாக கையளிக்கப்பட்டன. நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதிய விருந்தளிக்கப்பட்டது.●

## ஓலைத்தொடுவாயில் புனித பர்த்தலமேயுவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட புதிய கோவில்



தோட்டவெளி பங்கின் துணைப் பங்குகளில் ஒன்றான ஓலைத்தொடுவாய் கிராமத்தில் புனித பர்த்தலமேயு திருத்தூதருக்கு அர்ப்பணிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்ட புதிய கோவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் கடந்த ஒக்டோபர் 22ம் தேதி 2023 அன்று அர்ச்சிப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தோட்டவெளி பங்குதந்தை அருட்பணி. கிறிஸ்து நேசரெட்ணம் அடிகளாரின் வழிப்படுத்தலிலும் முன்னைய பங்குத்தந்தையரின் பங்களிப்பிலும் கிராம மக்கள், மறைமாவட்டம் மற்றும் வெளிநாட்டு கொடையாளர்களின் தாராள உதவிகளிலும் இக் கோவில் கட்டுமானப்பணி நிறைவுற்றது.

ஓலைத்தொடுவாய் கத்தர் கோவில் என பொதுவாக அழைக்கப்படும் புனித பர்த்தலமேயு கோவில் தவக்காலங் -களில் மக்கள் திருப்பயணம் புரியும் திருத்தலமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. மன்னார் தீவுப்பகுதியில் இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களுக்கு, கத்தோலிக்க திருமறை இப்பகுதியில் செழித்தோங்கிய போது கோவில்கள் கட்டப்பட்டு நம்பிக்கையாளர்கள் வழிபட்டு வந்ததாக பாரம்பரியம் கூறுகின்றது. அதன் சான்றாக திருத்தூதர் புனித பர்த்தலமேயு கோவில் விளங்குகின்றது.●

## உயர்தர மாணவர்களுக்கான கிறிஸ்தவ நாகரீக மீளாய்வு வகுப்புகள்



மன்னார் மறைமாவட்டத்தின் புனித வளனார் திருமறைப்பணி நிலையத்தின் முன்னெடுப்பில் ஆண்டு 13 உயர்தர கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கான கிறிஸ்தவ நாகரீக மீளாய்வு வகுப்புகள் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்திலும் முறையே ஒக்டோபர் 28, 29 ஆம் தேதிகளில் நடைபெற்றன.

மறைக்கல்வி பணி நிலைய இயக்குநர் அருட்பணி மரியதாசன் றொக்சன் குரூஸ் அடிகளாரின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இம்மீளாய்வு வகுப்புகளின் வளவாளராக அருட்பணி றமேஸ் அமதி அடிகளார் செயற்பட்டார். 180ற்கும் அதிகமான மாணவர்கள் இதில் கலந்து பயன்பெற்றனர்.●

**2ம் பக்கத் தொடர்ச்சி**

**மன்னாரில் கலாபூஷணம் விருதாளர்...**

இவர் இயேசுவின் திருப்பாடுகளின் அரங்க ஆற்றுகையின் பிரதான பாத்திரமேற்று நடிப்புத் திறனை வெளிக்காட்டி உள்ளதுடன் மன்னார் மறைசாட்சிகள் குறித்த 'வித்துக்கள்' திரைப்படத்திலும் நடித்துள்ளார். கடந்த காலங்களில் பல்வேறு அமைப்புகளால் இலக்கிய விழாக்களில் 'கலைச் செம்மல்' விருது, உலகத் தமிழர் விருது, மன்-கலைச் சுரபி பட்டம் என விருதுகளை குவித்துக் கொண்ட இவருக்கு ''கலாபூஷணம்'' உயர் விருது கிடைத்து இவருக்கும் மன்னார் மண்ணுக்கும் பெருமைக்குரியதாகும்.

இவ் உயர் விருது பெற்ற இருவரையும் ''மன்னா-கலையருவி'' நிர்வாகம் மனதார பாராட்டி மகிழ்கின்றது.

**1ம் பக்கத் தொடர்ச்சி**

**உரோமையில் இலங்கை ஆயர்...**

கொரோனா பெருநோய் தொற்று உலகெங்கும் பரவியிருந்த கால கட்டத்தில் இலங்கை ஆயர் பேரவையினரின் மேற்படி சந்திப்பு தடைப்பட்டு பிற்போடப்பட்டிருந்தது. அது இவ்வருடத்தின் ஒக்டோபர் மாதத்தில் கை கூடியது. இவ்விடயமாக உரோமை சென்ற இலங்கை ஆயர் பேரவையினர் திருத்தூதர் புனித பேதுருவின் கல்லறையில் திருப்பலியை நிறைவேற்றிய போது இத்தாலியில் உயர்கல்வி கற்கும் இலங்கையைச் சேர்ந்த திருநிலையினரும் அதில் கலந்து கொண்டனர். அத்திருப்பலியை இலங்கை ஆயர் பேரவையின் தலைவரும் குருநாகல் மறைமாவட்ட ஆயருமான பேரருட்திரு ஹரல் அன்ரனி அவர்கள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

அகில உலகத் திருஅவையிலுள்ள ஏறக்குறைய 3,017 மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர் பேரவையினர் இந்த 'ad limina' சந்திப்பை பல்வேறு காலகட்டங்களில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.●

**பங்குத்தந்தையர்களுக்கு...**

தங்களது பங்குகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள் தொடர்பான விடயங்களை மன்னாவில் பிரசுரிக்கும் பொருட்டு எமது மன்னா மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# இலங்கைத் திருஅவைச் செய்திகள்

## மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மாநாடு



2024ஆம் ஆண்டிற்கான மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாடு ஒக்டோபர் 28ம் தேதி சனிக்கிழமை மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிளெனி மேய்ப்புப்பணி நிலையத்தில் நடந்து முடிந்தது.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பொன்னையா ஜோசப் அவர்களின் தலைமையிலும் இம் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி இன்னாசி ஜோசப் அவர்களின் ஒழுங்கு படுத்தலிலும் இடம்பெற்ற இம்மாநாட்டில் வருகின்ற இறைவேண்டல் ஆண்டிற்கான செயற்பாடுகள் பற்றிய முன்மொழிவிற்கான கருத்துரைகளும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் அக்கரைப்பற்று பங்குதந்தையும் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் இயக்குநருமான அருட்பணி ஜெரிஸ்டன் வின்சென் அவர்கள் இந்நிகழ்வில் வளவாளராக செயற்பட்டார்.●

## சவேரியார் உயர் குருமட மாணவர்களின் குருதிக்கொடை



கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமடத்தில் குருத்துவ கல்வி கற்கும் மாணவர்களில் 36 பேர் கடந்த நவம்பர் 07ம் திகதி செவ்வாய்கிழமை தம் குருதியை கொடையாக கொடுத்து யாழ்.ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கிக்கு உதவியுள்ளனர். இந்த நற்செயற்பாட்டினை இக்குருமடத்தின் புனித அன்னை தெரேசா சமூக சேவை குழுவினர் முன்னெடுத்துள்ளனர். தானங்களில் சிறந்த தானம் இரத்த தானத்தை வழங்கிய குருமட மாணவர்களையும் முன்னெடுத்த புனித அன்னை தெரேசா சமூக சேவை குழுவினரையும் மனதார பாராட்டுகிறோம்.●

## வருடாந்த தியான நாள்களில் யாழ்.மறைமாவட்ட குருக்கள்



யாழ். மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம் கடந்த நவம்பர் 06-10 வரையிலான நாள்களில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது. இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்படும் இத்தியான நாள்களில் இது முதல் பிரிவினருக்கானது. இந்த தியானத்தில் யாழ். மறைமாவட்ட முதன்மை குரு அருட்பணி ஜெபரட்ணம் உட்பட 58 வரையான குருக்கள் பங்கேற்று பயன் பெற்றனர். நற்கருணை நாதர் சபையைச் சேர்ந்த அருட்பணி. நிவேந்திரா குணசேகர அவர்கள் தியான உரைகள் வழங்கி இத்தியானத்தை நெறிப்படுத்தினார்.●

## தேசிய செபமாலைப் பேரணி



இலங்கை மரியாவின் சேனை செனாதூஸின் முன்னெடுப்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய செபமாலை பேரணி கடந்த 21.10.2023 அன்று சனிக்கிழமை மன்னார் மறைமாவட்டத்தின் மடுத்திருத்தலத்தில் நடைபெற்றது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரும் குருநாகல் மறைமாவட்ட ஆயருமாகிய பேரருட்திரு ஹெரல்ட் அன்ரனி பெரேரா அவர்களின் தலைமையில் மடுத்திருத்தல நிரைமுன்றில் நடைபெற்ற திருப்பலியைத் தொடர்ந்து இச் செபமாலை பேரணி இடம்பெற்றது. ஈற்றில் மடு அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இலங்கை மரியாவின் சேனையின் தேசிய இயக்குநரும் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயருமான பேரருட்திரு மக்ஸ்வெல் டி சில்வா, அநுராதபுர மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நோபட் அன்ராடி மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆகிய ஆயர்கள் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மரியாவின் சேனை பிரசீடிய உறுப்பினர்கள் என ஏறக்குறைய 4000 பேர்கள் பங்கேற்றிருந்தனர்.●


### மன்னா வாசகர்களே!

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar

பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'

வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


# உலகத் திருஅவைச் செய்திகள்

## காலநிலை மாற்றத்தில் அக்கறை காட்டும் திருப்பீடம்



காலநிலை நெருக்கடியைத் தீர்ப்பதில் திருப்பீடமும் திருத்தந்தை பிரான்சிசும் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் என அபுதாபியில் நவம்பர் 06 அன்று வத்திக்கான் செய்தி சேவைக்கு வழங்கிய நேர்காணலில் திருப்பீடசெயலாளர் கர்தினால் பியெத்ரோ பரோலின் எடுத்துரைத்தார். திருப்பீடம் காலநிலை மாற்றம் குறித்த பிரச்சினையின் அனைத்து கண்ணோட்டங்களிலும் ஆர்வமாக உள்ளது. வாயு உமிழ்வை குறைத்தல், கடல் மட்டம் உயர்வதில் உள்ள பிரச்சினை என பலவற்றை பற்றி அது பேசி வருகின்றது என கூறிய திருப்பீடச் செயலாளர் காலநிலை மாற்றம் குறித்த இரண்டு விடயங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.அவை வாழ்க்கை முறைகளில் மாற்றத்தை கொணருவதும் அது குறித்த கல்வி அறிவை பெறுவதுமாகும் என தொடர்ந்து கூறினார்.

கடவுள் நம்மை படைத்த போது அவர் மனித குலத்திடம் ஒப்படைத்த பணி படைப்பினை பாதுகாப்பதே. எனவே மானிடருக்கும் இயற்கைக்கும் தீங்கு விளைவிக்காமல் நாம் உண்மையில் நம் வாழ்கையை மாற்றவேண்டும். புதிய தலைமுறையினருக்கு இது குறித்த கல்வியை சரியாக, வழியாக வழங்க வேண்டுமென கர்தினால் பியெத்ரோ பரோலின் கூறியுள்ளார். ●

## புனித வாழ்வு வாழ நாம் இயேசுவை ஒத்திருப்போம் அழைக்கின்றார் நம் திருத்தந்தை



புனித வாழ்வு வாழ நாம் இயேசுவை ஒத்திருப்பது இன்றியமையாதது என திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார். இறை இயேசுவின் உணர்வுகளுடன் நம் இதயங்கள் துடிக்க அனுமதிப்பதே இயேசுவை ஒத்திருப்பது ஆகும். மேலும் இயேசு நேசித்ததைப்போல நாம் அன்பு செலுத்த முயற்சிக்கும் போது மட்டுமே கடவுளை காணும் வழியில் புனித வாழ்விற்கான நமது அழைப்பை நிறைவேற்றுவோம் என எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ், இவரின் இச்செய்தி ஒருவர் ஒருவருக்கான அன்பில் நிலைத்து இறை பிரசன்னத்தை நிலைநாட்ட பெரும் தூண்டுதலாக அமைகின்றது. ●

## விண்ணகத்தை நோக்கி விரையும் நம் செபங்கள்



இறந்த அனைத்து நம்பிக்கையாளர்களை நினைத்து இறைவேண்டல் செய்ய நவம்பர் மாதம் நம்மை வலியுறுத்து கின்றது. அவர்களுக்கான நமது செபங்கள் விண்ணகத்தை நோக்கி செல்கின்றன என திருத்தந்தை பிரான்சிஸ் தன் டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

செபத்தின் வழியாக இறந்த நம்பிக்கையாளர்களுக்கு நாம் உறுதுணை அளிக்க முடியும். விண்ணகத்தை நோக்கிச் செல்லும் நமது செபங்கள் வழியாக அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருந்து நிலைவாழ்விற்கு அவர்களை அழைத்துச் செல்லும் பிணைப்புகளை ஏற்படுத்துவோம். நம்மை விட்டுப் பிரிந்த, இறந்த நம்பிக்கையாளர்களை அதிகமாக நினைவுகூரும் நவம்பர் மாதத்தில் அவர்களுக்காக தொடர்ந்து செபிப்போம் என தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

## சுவிஸ் - ஒல்ரன் மாநகரில் பணியாளருக்கான தியானம்



சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் முன்னெடுப்பில் ஒவ்வொரு வருடமும் அங்குள்ள அனைத்து பணியக (17 பணியகங்களின்) பணியாளர்களுக்கான ஒருநாள் தியான அமர்வுகள் நவம்பர் மாதத்தில் இடம்பெறுவது வழக்கமாகும். அதன்படி 18.11.2023 சனிக்கிழமை சுவிட்சலாந்து நாட்டின் ஒல்ரன் மாநகரிலுள்ள புனித மரியன்னை கோவிலில் இவ்வருடாந்த தியானம் நடைபெற்றது.

சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க பணியக இயக்குநர் அருட்பணி ஆ.யூ. முரளிதரன் அவர்களின் தலைமையிலும் இப்பணியக அருட்பணிப் பேரவையினரின் உதவியிலும் உரோமையி -லிருந்து சுவிஸ் சென்று தியானஉரைகள் வழங்கிய யாழ். மறைமாவட்ட அருட்தந்தை அருட்பணி ஜேம்ஸ்நாதனின் அருளுரைகளிலும் சுவிசில் வசிக்கும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த திருவாளர் டியூட்டர் அவர்களின் வலுவூட்டல் உரையிலும் இத்தியான அமர்வுகள் சிறப்புற்றன.

சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகமானது மன்னார் மறைமாவட்டத்திலிருந்து ஒரு கால வரையறையில் அனுப்பி வைக்கப்படும் அருட்பணி. இயக்குநர்களின் இயக்குதலில் சமூக, கலாசார, ஆன்மிக நிலைகளில் வளர்ச்சி கண்டுள்ளது கண்கூடு. தற்போது 06வது இயக்குநராக மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர் முரளிதரன் அடிகளார் அங்கு பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

சிறப்புப் பக்கம்

# அறிவோம் திருவருகைக்காலத்தை



**திருவருகைக்காலம்**

திருவருகைக்காலம் என்பது "Advent" என்னும் லத்தீன் மொழிப்பெயர்ப்பிலிருந்து "வருகை" எனப்பொருள் பெறுகின்றது.

**திருவருகைக்காலம் இரண்டு பண்புகளைக் கொண்டது.**

ஒன்று இயேசு இவ்வுலகில் முதல்முறையாக வந்த நிகழ்வைக் கொண்டாட மக்களைத் தயாரிக்கிறது. இரண்டாவது வரவிருக்கும் இயேசுவின் இரண்டாம் வருகையையும் ஆவலுடன் எதிர்பார்க்க மக்களைத் துாண்டுகிறது. இவ்வாறு திருவருகைக் காலம் எதிர்பார்ப்புடன் கூடிய மகிழ்ச்சியின் காலமாக விளங்குகிறது.

இது நான்கு வாரங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த நிகழ்வை சிறப்பிக்கும் விதமாக ஒவ்வொரு வாரமும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வளையத்தினுள் நான்கு நிறம் கொண்ட மெழுகுவர்த்தியை ஏற்றலாம்.

**திருவருகைக்காலம் பற்றி இறைமக்கள் அறிந்து கொள்ள வேண்டியது பத்து படிப்பினைகள்...**

**1. திருவருகைக் காலத்தின் நோக்கம் என்ன?**

திருவருகைக் காலம் கத்தோலிக்க திருவழிபாட்டு காலத்தின் ஆரம்பம். திருவழிபாட்டிற்கான பொதுவிதி முறைகள் (39) கூறும் திருவருகைக் காலத்தின் பண்புகள்:

இறைமகன் மனிதரிடையே முதல் முறை வந்ததை நினைவு கூறும் கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழாக் கொண்டாட்டங்களின் தயாரிப்புக் காலம் ஆகும்.

அவ்வாறே காலத்தின் நிறைவில் நிகழும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்க உள்ளங்கள் தூண்டப்படும் காலமும் இதுவே. இவ்விரு காரணங்களால் திருவருகைக் காலம் இறைப்பற்றும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்பார்ப்பின் காலமாக விளங்குகின்றது.

**2. திருவருகைக் காலத்தில் பயன்படுத்தப்படும் நிறங்கள் யாவை?**

திருவுடைகளின் நிறத்தைப் பொறுத்த மட்டில் மரபுவழிப் பயன்பாடு பின்பற்றப்பட வேண்டும். அதாவது: ஊதா நிறம்: திருவருகைக் காலத்திலம் தவக்காலத்திலும் ஊதா நிறம் பயன்படுத்தப்படும் (GR 346) இளஞ்சிவப்பு நிறம் வழக்கத்தில் இருப்பின் திருவருகைக்கால 3ஆம் ஞாயிறு அன்று ("மகிழுங்கள்") இளஞ்சிவப்பு நிறம் பயன்படுத்தப் படலாம். (GIRM 346)

**3. திருவருகைக் காலம் துக்கமான காலமா? அல்லது மனவருத்தத்திற்கான காலமா?**

திருவருகைக் காலம் துக்கமான, அல்லது மனவருத்த அல்லது தவத்திற்கான காலமல்ல. ஊதா நிறம் வழிபாட்டு நிறமாக இருந்தாலும் திருஅவை சட்டம் 1250 குறிப்பிடுவது போல ஆண்டின் எல்லா வெள்ளிக்கிழமைகளும் மற்றும் தவக்காலத்தின் அனைத்து நாள்களுமே மனவருத்தத்தின் காலங்களாகும்.

**4. திருவருகைக் காலம் எப்போது தொடங்கி எப்போது முடிவடைகிறது?**

வழிபாட்டு பொது விதிமுறை (40)ன் படி திருவருகைக் காலம் நவம்பர் 30ம் நாளில் அல்லது அதற்கு அண்மையில் வரும் ஞாயிற்றுக்கிழமை, முதல் மாலைத் திருப்புகழோடு தொடங்கி, கிறிஸ்து பிறப்பு விழாவின் முதல் மாலைத் திருப்புகழுக்கு (டிசம்பர்24)க்கு முன் முடிவடையும்.

**5. திருவருகைக் கால ஞாயிற்றுக்கிழமைகளில் முக்கியத்துவம் என்ன?**

திருவழிபாட்டு பொதுவிதிமுறை (41)ன் படி திருவருகைக் காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் திருவருகைக்கால 1,2,3,4 ஆம் ஞாயிறு எனப்படும். திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறுக்கு "மகிழும் ஞாயிறு" என்ற சிறப்பு பெயர் உண்டு. விதிமுறை 5ல் எல்லா ஞாயிற்றுக் கிழமையும் தனி முக்கியத்துவம் வாய்ந்தது எனவும், எனவே அது பெரு விழாக்களுக்கும் கிறிஸ்துவின் விழாக்களுக்கும் மட்டுமே இடம் தரும் என்கிறது: ஆனால் திருவருகைக்கால, தவக்கால, பாஸ்கா கால ஞாயிற்றுக்கிழமைகள் ஆண்டவருடைய விழாக்களுக்கும், மற்ற எவ்வகைப் பெருவிழாக்களுக்கும் மேலான இடம்பெறும். GIRM 380 ன் படி திருவருகைக்கால ஞாயிறுகளில் இறந்தவர்களுக்கான அடக்கத்திருப்பலி இடம் பெறலாகாது.

**6. திருவருகைக் கால வார நாள்களில் என்ன நிகழ்கின்றது?**

திருவருகைக்கால வார நாள்களில் மக்களுடனான திருப்பலியின் போது தினமும் மறையுரை பரிந்துரைக்கப் படுகின்றது. ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் கடன் திருநாள்களில் மக்கள் பங்கேற்கும் எல்லாத் திருப்பலிகளிலும் மறையுரை நிகழ்த்துவது கட்டாயம் ஆகும் (GIRM 66). விதிமுறை 42 டிசம்பர் 17 முதல் 24 உட்பட வரும் வார நாள்கள் கிறிஸ்து பிறப்புக்கு நேரடி முன்னேற்பாடாக அமைக்கப் பட்டுள்ளன என்பதின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

**7. திருவருகைக் கால ஆலய அலங்கரிப்பு எவ்வாறு நிகழ்கிறது?**

பீடத்தை அணி செய்வது மிதமான அளவோடு இருக்க வேண்டும். திருவருகைக் காலத்தில் அக்காலத்தின் தன்மைக்கேற்ப பீடத்தை மிதமான அளவில் மலர்களால் அணி செய்தல் வேண்டும். அது ஆண்டவருடைய பிறப்பின் நிறை மகிழ்வை முன்னறிவிப்பதாய் அமைதல் கூடாது. மலர்களால் அணி செய்வது எப்பொழுதும் அளவுக்கு மிகாமல் இருத்தல் நல்லது. மலர்கள் பீட மேசையின் மீது வைக்கப்படுவதை விட பீடத்தைச் சுற்றி வைக்கப்பட வேண்டும். (GIRM 305).

**8. திருவருகைக் காலம் இசையின் பங்கு என்ன?**

திருவருகைக் காலத்தில் அதன் தன்மைக்கு ஏற்றவாறு, இசைப் பெட்டியையும் பிற இசைக் கருவிகளையும் மிதமாக, ஆண்டவருடைய பிறப்பின் நிறை மகிழ்வை முன்னறிவிக்காத அளவில் மீட்டுதல் வேண்டும். (GIRM 313).

**9. திருவருகைக் காலத்தில் உன்னதங்களிலே பாடவேண்டுமா? சொல்ல வேண்டுமா?**

திருவருகைக் காலத்தில் உன்னதங்களிலே பாடுவதோ சொல்வதோ இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டும். (GIRM 53).

**10. திருவருகைக் காலத்தில் பரிந்துரைக்கப்படும் தனிப்பட்ட சிறப்பு பக்தி முயற்சி என்ன?**

திருவருகைக் காலத்திற்கான சிறப்பு பக்தி முயற்சிகள் பலவற்றில் திருஅவை பரிந்துரைப்பதும் அதிகமாக பழக்கத்தில் உள்ளதுமானது திருவருகைக்கால இளந்தளிர் வளைய வழிபாடு (Wreath Service) ஆகும்.

# நல்வாழ்விற்கு வழிகாட்டும் கருவறைகளே கல்லறைகள்

அலோசியஸ் ஜெயநாயகம் நோயல் டானியல்,
காத்தான்குளம், வட்டக்கண்டல்.

கார்த்திகை மாதம் மரித்தோரின் மாதமாக திருஅவையிலே கொண்டாடப்படுவது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இந்த உலகிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப்பற்றி மட்டுமல்லாமல் வாழ்ந்து மரித்தவர்களைப் பற்றியும் அதிகமாக சிந்திப்பவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் மட்டும்தான் என்று கூறினால் அது மிகையாகாது.

"நீ இருக்கும் இடத்தில் நான் இருந்தேன்" நானிருக்கும் இடத்தில் நீ இருப்பாய்". இது ஒரு கல்லறை மேல் எழுத்தப் பட்டிருந்த வாக்கியம்.

"கல்லறைகள் நாம் சிறப்பாக வாழ்வதற்கு சிந்தனைகளைத் தருகின்ற கருவறைகள்" என்னும் வாக்கியம் புத்தகத்தின் அட்டைப்படத்தில் எழுதப்பட்டிருந்தது. இந்த வாக்கியங்கள் நம்மை அச்சுறுத்துவதற்காக எழுதப்பட்டவை அல்ல. மாறாக நாம் ஆழ்ந்து சிந்திப்பதற்காகவும், அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்காகவுமே தரப்பட்டுள்ளது. ஒருமுறை மறைக்கல்வி வகுப்பு நடத்திக்கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம், ''உண்மையான கிறிஸ்தவன் யார்? என்று கேட்டார். அப்பொழுது ஒரு மாணவன் எழுந்து நின்று, "மரணத்தைக் கண்டு அஞ்சாதவன் எவனோ அவனே உண்மையான கிறிஸ்தவன்" என்று பதில் கூறினான். மோட்சத்திற்கு செல்ல எல்லாரும் விரும்புகின்றார்கள். ஆனால் இறப்பதற்கு யாரும் விரும்புவதில்லை என்பது எதார்த்தமாகும்.

மேலும் மரணத்தைப் பற்றிய அச்சம் மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் உண்டு. விவிலியத்தைப் பொறுத்தவரையில் நமது தொடக்கப் பெற்றோர்கள் செய்த பாவத்தினால்தான் மரணத்தைப் பற்றிய பயம் இந்த உலகத்திலும் மனிதனின் உள்ளத்திலும் நுழைந்தது. ஒவ்வொரு நாளும் நம்மைப் பார்த்து நாம் கேட்க வேண்டிய கேள்வி, "எதற்காக நாம் இறக்க வேண்டும்? என்பதல்ல மாறாக இறப்பதற்கு நாம் ஏன் பயப்படுகின்றோம்? என்பதுதான்." ஏனென்றால் கண்ணதாசன் அழகாக சொன்னது போல், "சாவதற்கு எவன் அஞ்சுவதில்லையோ, அவனே வாழ்வதற்கு தகுதியுள்ளவன்". இறந்த நம்பிக்கையாளர்களைப் பற்றி நினைத்துப்பார்க்கும் நவம்பர் மாதத்திலே வாழ்வதற்கு நாம் தகுதியுள்ளவர்களா என்றும் சிந்தித்துப்பார்ப்போம். எப்போது மரணத்தைப் பற்றிய பயம் நம்மிலிருந்து நீங்குகின்றதோ அப்போது தான் உண்மையிலே நாம் வாழத் தொடங்குகின்றோம்.

கிறிஸ்தவ தமிழர்களாகிய நமக்கு கார்த்திகை மேலும் சிறப்பான காலமாகும். இறந்த நம்பிக்கையாளர்களுக்காக இறைவேண்டல் செய்வதோடு போரில் இறந்த மாவீரர்களை நினைவேந்தி நிற்கும் காலமாகவும் இது அமையப் பெறுகிறது. ஒவ்வொரு போராளியின் மரணமும் இந்த மண்ணின் விடுதலை வேட்கையை பறைசாற்றுகின்றது. துயிலுமில்ல நடுகல்களை நினைத்துப் பார்க்கும் போது, விடுதலையின் மீது நமக்கு தாகம் ஏற்படுகின்றது. கொள்கைக்காக இறந்தவர்களின் அர்ப்பணிப்பு தியாகம் நமக்கு உரமூட்டுகிறது. இந்த தியாக உணர்வை ஊட்டுவதற்கும் தக்க வைப்பதற்கும் "மாவீரர்" தினமானது உலகத் தமிழரால் கொண்டாடப்படுகின்றது. தொடக்ககால திருஅவையிலே "Catacombs" என்று அழைக்கப்படும்



கல்லறைகள்தான் தொடக்க கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்ற இடங்களாக இருந்தன என்று வரலாற்றிலே படிக்கின்றோம். "இயேசுவின் காலியான கல்லறைதான் இயேசு உயிர்த்து விட்டார் என்ற சீடர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியது" என்று விவிலியம் கூறுகின்றது.

கார்த்திகை மாதத்திலே நாம் மரித்தோரின் கல்லறைகளுக்கு சென்று இறந்தவர்களுகளின் வீடுபேற்றிற்காக செபிப்பது நமது கடமை. அவ்வாறு சென்று செபிக்கும்போது நமது நிலையற்ற வாழ்க்கையை பற்றியும் நாம் வாழ்கின்ற முறையைப் பற்றியும் சற்று சிந்தித்துப் பார்க்க முயலுவோமாக. ஏனென்றால் "கல்லறைகள் நாம் சிறப்பாக வாழ்வதற்கான சிந்தனைகளைத் தருகின்ற கருவறைகளாக இருக்கின்றன. மரணத்தைப் பற்றி தெரியாதவனுக்கு வாழ்க்கையைப் பற்றித் தெரியாது என்பது புனித அகுஸ்தினாரின் வார்த்தைகள். நமது வாழ்க்கையைப் பற்றி நாம் புரிந்து கொள்ள விரும்பினால் ஒவ்வொரு நாளும் நமது மரணத்தைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு நாளையும் இறுதி நாள் என்று நினைத்து அதை முழுமையாக இறைவனுக்கு ஏற்ற விதத்தில் வாழ்ந்தால் முடிவில்லா வாழ்வை பெறுவோம் என்பது உறுதி.

* * * * * * *

# கருணை கொள்வோம்

கருணை என்பது கடவுளின் குணம். தான் உருவாக்கியவை தழைத்தோங்க வேண்டுமென கடவுளின் கருணை விரும்புகிறது. கடவுளின் படைப்புகள் நாம். கடவுளின் சாயல் நாம். கடவுளின் பாவனை நாம். கடவுளுக்கு உகந்தவர்களாக நடந்து கொள்வோம். கருணை பொங்க வாழ முயற்சிப்போம். பிறருக்குக் காட்டும் கருணை கருணையாகவே நமக்குத் திரும்பும். கொடுப்பதன் மூலம் பெற்றுக் கொள்வதற்கு அருகதை பெறுவோம். கருணை உள்ளவர்களாக நாம் வாழும் போது நமது உடல் நலம் பெறுகிறது. ஆதரவற்றவர்கள், முதியவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு கருணை காட்டுவது மிகுந்த அர்த்தமுள்ளது. இவர்கள் எல்லாருமே கடவுளின் அம்சங்கள். இவர்கள் இந்த உலகில் தோன்றியதற்கும் ஒரு புனித காரணம் இருக்கிறது. கருணையோடு இவர்களுக்குச் செய்யும் சிறு உதவிகள் இவர்களில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும்.

நம்மில் நாமே கருணை காட்டுவோம். நம்மை உள்ளடக்கி வைத்திருக்கும் நமது உடல் ஒரு கோவில். கருணையோடு அதைப் பேணிக்காப்போம். உடலை மதிக்கின்ற, நேசிக்கின்ற ஒருவரால் தீயபழக்கங்களுக்கு அடிமையாகி தன் உடலுக்குத் தீங்கு செய்ய ஒருபோதும் முடியாது. தவறான முடிவுகளை எடுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முடியவே முடியாது. தேவையான உடல் நலம் இயற்கையாகவே நமக்குத் தரப்பட்டிருக்கிறது. அதை நாம் குலைத்துக் கொள்ளாமலிருந்தால் சரி. நமது உடலை உரிய மரியாதையுடன் நடத்துவோம். அதற்கு சுயமதிப்பு உணர்வு ஒன்றே போதும்.

எல்லா உயிர்களிடத்திலும் கருணை காட்டுவோம். எல்லா உயிரினங்களிலும் கருணை காட்டுவோம். உயிர்மை நேயம் ஒழுகுவோம். கருணை உணர்வு பொங்கும் எண்ணங்களைப் பரவ விடுவோம். கருணையை எக்காலத்திலும், எந்தச் சூழலிலும் காண்பிக்கும் குணத்தைப் பெற்றவர்களாக மாறுவோம்.

**ஜெயாபாலாஜி, முருங்கன்.**

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.**

சிறப்புப் பக்கம்

# 2024ஆம் செப ஆண்டிற்குரிய மன்னார் மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணித் திட்டங்கள்

**முன்னுரை:**

2024ஆம் ஆண்டிற்குரிய கருப்பொருளான “செபம்” என்பதை மையப்படுத்தி நமது செப இறையனுபவம் என்ன என்றும், குடும்பங்களாக, இளையோராக, சிறுவராக, அன்பியக் குழுமங்களாக மறைமாவட்டத்திலே வாழ்வியல் மற்றும் இயங்கு தளங்களிலே செபத்தின் மட்டிலான நமது இன்றைய போக்குகள் எவ்வாறு காணப்படுகின்றது என்றும், மேலும் இன்னும் அதிகமாக எவ்வாறு செபத்தில் வளரலாம் என்றும், அத்தோடு செபத்தின் முக்கியத்துவம் அனைத்து சாரார் மத்தியிலும் கட்டாயம் உணரப்பட வேண்டும் என்றெல்லாம் பல்வேறு கோணங்களிலே முன்வைக்கப்பட்ட கருத்துக்கள், ஆலோசனைகள், முன்மொழிவுகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

**1. நாம் எவ்வாறு மென்மேலும் செபிக்கும் குடும்பங்களாக வளர முடியும் என்பதைப் பற்றி மேய்ப்புப்பணி மாநாடு வெளிக்கொணர்ந்த கருத்துப் பகிர்வுகள்:**

❖ குடும்பங்களில் அதிகமாக பாரம்பரிய செபங்களை செபிக்கவும், இறைவார்த்தையை தொடர்ந்து வாசிக்கவும், நற்கருணைக்கு முன்னால் செபம் செய்யவும், குடும்ப செபத்திற்கான நேரத்தை ஒதுக்கி செபிக்கவும், தொடர்ந்து செபிப்பதை ஊக்குவித்து செபிப்பதற்கான தொடர் பயிற்சி வழங்க வேண்டும்.

❖ நாம் கடவுளிடம் முன்வைக்கும் தேவைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கேட்டு செபித்தல் வேண்டும்.

❖ குடும்பங்களின் தேவைகளை முதன்மைப்படுத்தி அதற்காக ஒரு நாளை தெரிவு செய்து, மறைமாவட்டம் முழுவதுமாக குடும்பங்களுக்காக செபித்தல் நல்லது என்று வெளிப்படுத்தப்பட்டது.

❖ நமது பங்குகளில் சிறப்பாக ஒரு நேரத்தை செப நேரமாக தெரிந்து அனைவரையும் ஒன்றாக வீடுகளில் இருந்து செபிக்க தூண்டுதல் சிறந்தது.

❖ செபத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வுகளை அனைத்து நிலையினருக்கும் வழங்குதல் வேண்டும்.

❖ பிற செயற்பாடுகளுக்கு கொடுக்கும் நேரத்தில் ஒரு பகுதியையாவது நமது குடும்ப மற்றும் தனிப்பட்ட செபத்திற்கு கையளிக்க வேண்டும்.

❖ செபத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவும் செபிக்கவும் மறைக்கல்வி மாணவர்களை தூண்ட வேண்டும்.

❖ திருப்பலியின் உன்னத நிலையை உணர்ந்து பங்குகளிலுள்ள குடும்பங்கள் ஞாயிறு திருப்பலியில் தவறாது பங்குகொள்ள முயற்சிகள் எடுக்க வேண்டும்.

❖ குடும்பத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு செபிக்க கற்றுக் கொடுக்க வேண்டும்.

❖ உணவு பகிர்வின் போது செபத்தின் வல்லமையை உணர்ந்து குடும்பத்தில் செபத்தைப்பற்றி அடிக்கடி உரையாடுவது சிறந்தது.

❖ குடும்பங்களில் முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன்பும் இன்னும் ஏனைய நாளாந்த செயற்பாடுகளிலும் குடும்பத்தில் அனைவரும் கூடி இருந்து செபிக்க ஊக்குவிக்க வேண்டும்.

❖ பெண்களே அதிகமாக செபிக்கின்றவர்களாகவும், ஆனால் ஆண்கள் செபிப்பது குறைவாகவும் இருப்பது கண்கூடாக காணமுடிகின்றது. எனவே ஆண்களையும் செபிக்க ஊக்குவிக்க வேண்டும்.

❖ குடும்பங்களில் செபிப்பது இன்று குறைவாக இருக்கின்றது. எனவே குடும்ப செபத்தை பங்குகளிலே ஊக்குவிக்க ஏதுவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அன்பிய வழிபாடுகளிலே குடும்பமாக பங்குகொள்ள ஊக்குவிக்கப்படல் வேண்டும். குடும்பங்களில் செபங்களுக்கான தேவை நம் மத்தியில் ஆழ் மனதில் இருந்தாலும் பாரம்பரிய செபங்களை விட தேவையை உணர்ந்து செபிப்பது குடும்பங்களில் தற்போது சற்றுக் குறைந்துதான் இருக்கின்றது.

❖ பாரம்பரிய ரீதியான இறைபியலின் ஆன்மீக காரியங்களை தொடர்ந்து பின்பற்றல். (காலை, மாலை வேளையில் தொழிலுக்கு செல்லும் போது செபித்து ஆசீர்வாதம் பெறல்) (குடும்பங்களின் பிள்ளைகள் வெளியே போகும் போதும் உள்ளே வரும் போதும் ஆசீர்வாதம் வழங்கி அனுப்புதல்.)

**2. இளையோர்களின் செபவாழ்வு அதிகரிக்க இம் மேய்ப்புப்பணி மாநாட்டில் இடம்பெற்ற சிறப்புரை மற்றும் குழு ஆய்வுகளிலிருந்து முன்வைக்கப்பட்ட சிறப்பு ஆலோசனைகள்:**

❖ இளையோர்கள் செபிப்பதை நிறுத்தும் போது அல்லது செபிக்காதபோது அவர்கள் வாழ்வில் இடறத் தொடங்கு -கின்றார்கள்.

❖ பங்கிலே உள்ள இளையோர்கள் மற்றும் இளையோர்கள் ஆணைக்குழுவின் மத்திய குழுவில் காணப்படும் ஒவ்வொரு இளையோரும் ஆளுக்கொரு விவிலியம் வைத்திருக்கவும் கிழமையில் ஒரு சிறிய பகுதியையாவது வாசிக்கவும் தியானிக்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

❖ ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் இளையோர்களாக எமது மறைமாவட்ட இளையோர்கள் விளங்க அவர்களுக்காக நாம் அனைவரும் இடைவிடாமல் செபிக்க வேண்டும். தெய்வபயத்தை இன்றைய சிறுவர்கள் அதாவது நாளைய இளையோரின் மனங்களிலும் செயல்களிலும் விதைக்க வேண்டும்.

❖ பங்கிலும், துணை ஆலயங்களிலும் இளையோர் திருப்பலியை மாதத்தில் ஒரு தடவையேனும் இளையோர்களுடன் சேர்ந்து ஒப்புக்கொடுத்து, அவர்களோடு சிறிய உணவுப் பகிர்வை அந்த நாளிலே வைத்து அவர்களோடு உரையாடுவது சிறந்தது.

❖ தனிப்பட்ட செபங்களை சொல்லி செபிக்க இளையோர்கள் தொழிலுக்கு போகும் போதும், பிரயாணத்தின் போதும், முடிவுகளை எடுக்கும் போதும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

❖ இளையோர்கள் மத்தியிலே தனிப்பட்ட நற்கருணைச் சந்திப்பிற்கான பழக்கத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும். வெள்ளிக்கிழமை நற்கருணை ஆராதனை வழிபாடுகளிலே இளையோர்கள் அவற்றின் ஒரு பகுதியையாவது சிறப்பிப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பை பங்குகளிலும், வழிபாடுகளிலும் இன்னும் அதிகரிக்கலாம்.

❖ மறைமாவட்டத்திலுள்ள திருத்தலங்களை பங்குத்தந்தை மற்றும் பங்கில் பணியாற்றும் துறவிகளுடன் சேர்ந்து இளையோர்கள் தரிசிப்பது அவர்கள் மத்தியிலே ஒரு ஒன்றிப்பை வளர்க்கும்.

❖ திருச்செபமாலை சொல்லுவதற்கும், திருச்செபமாலையை கழுத்திலே அணிவதற்கும், இளையோர்கள் பிரயாணங்களிலே கொண்டு சென்று செபிப்பதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

❖ மாதாந்த, வாராந்த இளையோர்கள் கூட்டங்களை பங்குகளில் நடாத்துதல் கட்டாயமானதாகும்.

❖ மறைமாவட்டத்தில் இளையோர் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்படும் அனைத்து நிகழ்வுகளிலும் பங்குகளின் பிரதிநிதிகள் தவறாது பங்கெடுக்க பங்குத்தந்தை மற்றும் பங்குச்சபைகள் கூட்டுப்பொறுப்போடு செயற்படல் வேண்டும்.

❖ ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளும் விருப்பத்தோடு பாவசங்கீர்த்தன தொட்டிகளை நாடி வருவதற்கு



இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

❖ தங்கள் குடும்பங்களில் சொல்லப்படும் செபங்களில் இளையோர்கள் பங்கெடுப்பது குறைவாக இருக்கின்றது. அதற்கான பல காரணிகள் இருந்தாலும், விடாப்பிடியாக அவர்களை கொஞ்சம் கொஞ்சமாக குடும்ப செபத்திற்கு அமரவைக்க தந்தை தாய் பங்குத்தந்தை துறவியர்கள் துணைசெய்ய வேண்டும்.

❖ வெறுமனே அறிவுரை கொடுப்பதால் அல்ல மாறாக அவர்களைப் புரிந்துகொண்டு இளையோர்களுடன் சேர்ந்து பயணிப்பது இளையோர்களின் மனதிலே ஒரு நேர்மறையான ஆன்மீகத்தை உண்டுபண்ணும் காரியமாக அமையும்.

❖ நமது சாட்சிய வாழ்வுதான் பல இளையோர்களை ஆன்மீகத்தின் பக்கம் கவர்ந்திட ஏதுவான வழியாகும்.

❖ கடவுளுக்கும் இந்த உலகக் காரியங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை இளையோர் கண்டுகொள்ள சிறிய வயதிலிருந்து அவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.

❖ இளையோர் மறைக்கல்வியை வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

❖ மாதாந்த தியானங்களை வழங்குதல், இளையோரைக் கொண்டு நோயாளரைத் தரிசித்தல், பாடசாலைகளிலேயே சிறுவர்களாய் இருக்கும் போதே செபிக்க அவர்களை ஊக்குவித்தல் போன்றவைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

❖ குடும்பத்தில் இளையோருக்கான செபவாழ்வு குறித்த கண்காணிப்பு தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

❖ தொலைத்தொடர்பு சாதனங்களை (Face book, Whatsapp, Zoom, Instagram) கொண்டு இன்றைய IGENES, PUSH BUTTON AGE இளையோர்களை செபிப்பதற்கு தூண்டலாம்.

❖ மூத்தவர்கள் பங்கிலும் குடும்பத்திலும் இளையோருக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும்.

❖ இன்னும் அதிகமாக வழிபாடுகளில் பங்கெடுக்க இளையோருக்கு இடமளிக்க வேண்டும்.

❖ இளையோர்களின் செயற்பாடுகள் மட்டிலே பங்குத் தந்தையர்களும் பெரியவர்களும் எப்போதும் பிழைகளை மாத்திரம் கண்டுபிடித்தால் அவர்கள் ஆலயத்தை நாடுவது குறைவாக இருக்கும். இவ்வாறான செயற்பாடுகளால் எமது பங்குகளில் பாதிக்கப்பட்ட இளையோர்கள் உண்டு. அவர்களை அடையாளம் கண்டு மீண்டும் ஆலயத்திற்கு கொண்டு வர ஆவன செய்தல் வேண்டும்.

❖ இளையோருக்கான ஆன்மீக எழுச்சி விழா ஒன்றை வைப்பது சிறந்தது.

❖ இளைஞர் யுவதிகளை ஆலயத்தில் இயங்கு நிலையிலுள்ள பக்திச் சபைகளில் சேர்த்தால் அவர்களின் செப வாழ்வு அதிகரிக்கும்.

❖ இளையோருக்கான உருவாக்கம் ஆலயம் மட்டிலே பீடப்பணியாளர் சபையில் இருந்து வருகின்றமையால் பீடப்பணியாளர்களுக்கான உருவாக்கம் சரியானதாக இருக்க வேண்டும்.

❖ பங்குச் செயற்பாடுகளில் இளையோரைப் புறந்தள்ளி காரியமாற்றாது அவர்களை உள்வாங்கி பணிகளை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது அவர்களும் ஆன்மீக காரியங்களிலே ஈடுபட வாய்ப்பு அதிகரிக்கும்.

❖ பாடசாலை திருப்பலிகள் இடம்பெறாத இடங்களிலே பாடசாலைத் திருப்பலிகள் இடம்பெறுவது நாளைய இளைஞர்களின் உருவாக்கத்திற்கு உதவியாக இருக்கும்.

❖ இளையோரை ஒதுக்கி விடாமல் அவர்களுடன் சேர்ந்து பயணிப்பது அவர்களின் மனதை மாற்றக்கூடியதாக இருக்கும்.

❖ பங்குத்தந்தை பங்கிலுள்ள இளையோரின் தகவல்களை திரட்டி, ஏன் அவர்களின் வரவு ஆலய நிகழ்வுகளிற்கு குறைவாக இருக்கின்றது என்பதை ஆய்வு செய்தல் வேண்டும். அதற்கான காரணத்தை அறியும் போது அதை சரிப்படுத்த தகுந்த வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

❖ பெரிய பங்குகளிலுள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு ஆண்டிலும் படித்த இளைஞர்களை வெவ்வேறு குழுவாக்கி அவர்களை செபத்தில் பங்குபெறச் செய்வது சிறந்ததாகும்.

❖ பங்குகளிலே உள்ள இளைஞர்களின் பிறந்த நாளைக் கொண்டாட அவர்களை ஒன்று கூட்டி, சில நிகழ்வுகளின் ஊடாக அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி, பிறந்தநாள் கொண்டாடுபவருக்காக செபிக்கும் மனநிலையை உருவாக்குதல் சிறந்தது. அந்த வேளையிலே ஓர் அருட்தந்தையோ அல்லது அருட் சகோதரியோ அல்லது பங்குச்சபை உறுப்பினரோ அவ்விடத்தில் பிரசன்னமாக இருப்பதும் நல்லது.

❖ இளையோரை ஒன்று கூட்டுவதற்காக சுற்றுலா செல்லுதல், விளையாட்டுக்களை நடாத்துதல், திருத்தலங்களைத் தரிசித்தல் கலைநிகழ்வுகளை நடாத்துதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வதால் இளையோர் செபத்தில் ஆழம்பெற இவை உதவியாக இருக்கும்.

❖ பங்கிலே படித்த, செபவாழ்வில் ஆழம்பெற்ற இளைஞர் யுவதிகளை வரவழைத்து, அவர்களுடைய அனுபவங்களை பகிர்வதன் ஊடாக, ஆலயத்திற்கு வருகை தராத அவர்களுடைய நண்பர்களையும் செப வாழ்விற்கு இட்டுச்செல்ல முடியும்.

❖ கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தை மறைமாவட்ட ரீதியிலேயே பொறுப்பான அருட்பணியாளரைக் கொண்டு கண்காணிப்பதும் ஊக்கமூட்டுதலும் அவ்ஒன்றிய மாணவரின் எதிர்காலத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

❖ மாதத்தில் ஒரு முறையாவது இளையோருக்கு ஒப்புரவு அருளடையாளம் வழங்குதல் சிறந்தது.

❖ இன்றைய கால சூழ்நிலைக்கேற்ப இளையோர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களை நெறிப்படுத்தவும், வழிகாட்டவும் ஒரு நல்ல மேய்ப்பர் தேவை. அந்த மேய்ப்பர் பங்குத்தந்தையாகவோ, துறவிகளாகவோ, மறையாசிரியராகவோ, பொதுநிலையினராகவோ இருக்க வேண்டும். இந்த மேய்ப்பர்கள் இளைஞர்களோடு உடன் பயணிக்கும் போது மேய்ப்பர்களின் முன்மாதிரிகையின் வாழ்க்கையின் ஊடாக இளைஞர்கள் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

❖ இளையோர்களைக் கொண்டு பங்கு தரிசித்தலில் ஈடுபடும் போது இச்செயல் அவர்களையும் செபிக்க தூண்டுவதாக இருக்கும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

## பாதைக்கு விளக்கு

# சுற்றுச் சூழலியம்! ஓர் கிறிஸ்தவப் பார்வை

பீ. வினோராச், கிளரீசியன் சபை.

**அறிமுகம்**

போர்க்களத்தில் பிறந்து அகதி முகாம்களில் வளர்ந்து ஆயுதங்களின் கோர ஒலிகளையும் அழு குரல்களையுமே ஆங்காங்கே தாலாட்டாய் கேட்டு வளர்ந்த ஓர் அனுபவமே எம் பலரின் உள்ளக் கிடக்கைகளில் புதைந்து கிடக்கின்றது. நடந்து வந்த பாதைகளை பலரில் ஒருவனாக நானும் திரும்பி பார்க்கும் போது பல வகையான எண்ணங்கள் மலர்ந்து மறைகின்றன. இவை எனக்குள் உற்பத்தி செய்யும் உணர்வலைகள் ஏராளம். சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் பாட புத்தகத்தில் பரீட்சைக்காய் மட்டும் படித்த சுற்று சூழலியம் இன்று பல ஐரோப்பிய நாடுகளின் அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கும் தேர்தல்களில் பேசு பொருளாக மாறி இருக்கின்றன.

**மாறி வரும் மனித வாழ்வியல்**

இப்பூமிப் பந்தின் வரலாற்றினை சற்றே இரைமீட்டி பார்த்தால், என்றுமே மனித குலம் தன் வாழ்வுக்கான, வளர்ச்சிக்கான தேடலில் முழு முனைப்போடு ஈடுபட்டிருப்பது எமக்கு தெளிவாகின்றது. சாயல்கள் மாறினாலும் இத்தேடல் இன்றும் உயிரோட்டமுடன் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த 21 ஆம் நூற்றாண்டில் இடம் பெறும் தேடலின் இலக்காய் இயற்கை அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் இயற்கையுடன் இரண்டறக் கலந்திருந்த மனித வாழ்வியலானது அண்மை காலங்களில் வளர்ச்சி, நாகரீகம், முன்னேற்றம் என்ற தேவையான ஆனால் மனிதனை மட்டும் முன்னிறுத்திய, ஏனைய படைப்புக்கள் மீதான ஓர் ஆதிக்க மனோ நிலை எம்மில் மேலோங்கியிருக்கிறது. இதன் காரணமாய் இயற்கையுடன் நாம் கொண்டிருந்த உறவு முறிவடைந்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும். இன்று பல நாடுகளில் மக்கள் எதிர் கொள்ள வேண்டியுள்ள ஒன்றுக்கொன்று முரணான காலநிலை மாற்றங்களும் பேரழிவுகளை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களும் இவ் உறவு முறிவின் வெளிப்பாடுகளே. வெயிலில் குளிரும் குளிரில் வெப்பமும் பணம் படைத்தவர்களுக்கு சாத்தியமாகின்றது. ஆனால் ஒரு வேளை உணவிற்கும், ஒரு குடம் குடிநீருக்கும் வெறுமனே அடிப்படை தேவைகளுக்கும் தினம் தினம் போராட வேண்டிய நிலையில் உள்ள உலகின் பெரும்பான்மை குடிமக்களாம் ஏழைகளின் நிலையென்ன? எத்தனை உயிர்களையும் பலிகொடுத்து தத்தம் அரசியல் அதிகார இருக்கைகளை தக்கவைக்க தயங்காத மக்கள் தலைவர்கள் மலிந்து விட்ட இத்தரணியில் இயற்கை தாயின் அழுகுரல் கேட்க யார் தயார்? இப்படி கேள்விகளை இன்று பலரும் எழுப்புகின்றார்கள் என்பதும் உண்மைதான். நிச்சயமாக இவர்களின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் இவற்றை வெறுமனே அரசியல் பொருளாதார, அறிவுசார் ஒழுக்க நெறிகளுக்குள் மட்டுப்படுத்துவது எந்த அளவுக்கு ஆரோக்கியமானது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் கடவுள் தொடங்கி மனிதன் மற்றும் ஏனைய உயிருள்ள உயிரற்ற அத்தனை விடயங்களையும் வெறுமனே இலாபம் ஈட்டக்கூடிய விற்பனை பொருளாய்க் குறுக்கி விட்ட வர்த்தக நுகர்வு கலாசாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கூட சுய இலாபம் தேடும் கட்டமைக்கப்பட்ட விம்பமாய் மாறாது என்பதற்று எந்த உத்தரவாதமும் இல்லை.

**சூழலியமும் கிறிஸ்தவர்களும்**

இவ்விடத்தில் தான் உலகிற்கு ஒளியாய் வாழ அழைப்புப் பெற்ற கிறிஸ்தவர்களாகிய எங்கள் கடமைகள் என்ன என்ற தேடல் தொடங்க வேண்டும். (காண்க. மத்.5:14-16.) கிறிஸ்தவர்களாகிய எமக்கு இது தட்டிக்கழிக்க முடியாத கடமை. நீண்ட நெடிய நம் பாரம்பரியத்தின் நிகழ்கால ஆன்மிகக் கடமை. ஏனெனில் எம்மை பொறுத்த மட்டில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு எம்மையும் நாம் தாங்கி வாழும் சூழலையும் பற்றியது மட்டுமல்ல மாறாக இவை அனைத்திற்கும் அடிநாதமாய் அமைந்த, பேரன்பு கொண்டு எம்மை தாங்கும் இறைவனையும் பற்றியது. அவருக்கும் எமக்கும் நாம் காணும் படைப்பனைத்திற்கும் இடையிலான ஆழமான உறவை பற்றியது. பரந்து விரிந்த இப்பிரபஞ்சத்தின் இற்றைவரைக்குமான வரலாற்றை ஒரு நூலாய் தொகுத்தால் அதன் இறுதி இரண்டு மூன்று பக்கங்களில் தான் மனித வரலாறு தொடங்குகின்றது என்கிறார்கள் அறிவியலாளர்கள். இதனையொத்த படைப்பின் ஒழுங்கு முறையைத்தான் விவிலியமும் எமக்கு விபரிக்கின்றது. (காண்க தொ.நூ.1:1-31.) இயற்கையின் அனைத்து கூறுகளையும் அதனதன் தனிப் பண்புகளோடு படைத்த பின் இறைவன் மனிதனை தன் சாயலாக உருவாக்கினார். (காண்க தொ.நூ.1:26.) ஆகவே நாம் படைப்பில் தனித்துவமானவர்கள்தான். சிறப்புமிக்கவர்கள்தான். இறைவனின் இதயத்திற்கு நெருக்கமானவர்கள்தான், இருப்பினும் இப்பண்புகளை நாம் ஏனைய படைப்புகளின் மீது செலுத்தும் அளவு மீறிய ஆதிக்கத்தின் ஊடாகவும், அவற்றை சிதைப்பதனூடாகவும் வெளிப்படுத்துவது நாம் செய்து வருகின்ற மிகப்பெரும் வரலாற்றுப்பிழை. ஏனெனில் இறைவன், படைப்பு இதில் நாம் என்ற ஒழுங்கு முறை என்பது மாற்ற முடியாத ஒரு புனிதமான உறவுமுறை. (கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி (இல:291). படைத்தவரை பிரிந்து படைப்பாகிய நாம் நெடுநாள் இயங்கமுடியாது. (யோவான்15:4-6, க.தி.ம. இல:338.) எனவே தான் திருத்தந்தை பிரான்சிஸ் 2015 ஆம் ஆண்டில் அனைத்துலக திருஅவைக்கு எழுதிய "இறைவா உமக்கு புகழ்" என்ற சுற்று மடலில் இயற்கையோடு ஒன்றிணைந்த ஒரு வாழ்க்கை முறையின் தேவையினை வலியுறுத்துகின்றார் (இல:228) சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வாழ்வை நேசிக்கும் ஒவ்வொருவரின் கடமையாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறைவனே ஒப்படைத்த பாரிய பொறுப்பு. இதனை தொடர்ந்து ஆற்றுவதனூடாக மட்டும் தான் நாம் படைப்புகள் அனைத்திலிருந்தும் தனித்துவமானவர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்த முடியும். எமது விவிலியப் பண்பாட்டிலும் சரி, நீண்டகால வரலாறு கொண்ட கீழைத்தேய மற்றும் மேலைத்தேய துறவற வாழ்விலும் சரி, பல்வேறுபட்ட மனிதர்கள் இறைவனை காணவும் ஆழமான ஆன்மிக அனுபவம் பெறவும் இயற்கையைத்தான் நெருங்கிச் சென்றார்கள்.

**விவிலியத்தில் இயற்கை**

மோசேக்கும் இறைவனுக்குமான சந்திப்புகள் சீனாய் என்ற மலையில் தான் இடம்பெறுகின்றன. (வி.ப.19) இஸ்ரேயல் மக்களின் வாழ்க்கை பயணங்களில் இறைவன் தன்னை நெருப்பு, மேகம், காற்று என்ற இயற்கையின் வெவ்வேறு கூறுகள் ஊடாகவே வெளிப்படுத்தி இருக்கிறார். அவர் தன் உடனிருப்பை உறுதி செய்து தம்மை பசும்புல் வெளிகளுக்கும் அமைதியான நீர்நிலைகளுக்கு அழைத்துச் செல்வதாய் தாவீது பாடுகின்றார். (திபா:23) எலிசா போன்ற இறைவாக்கினர்கள் இயற்கையிலேயே இறைவனை கண்டு கொண்டனர். (1அரச 19) இவ்வாறு பழைய ஏற்பாடு முழுவதுமே இயற்கையின் எழில்மிகு காட்சிகளால் நிறைந்து



கிடக்கின்றது. இவை அனைத்தும் இயற்கை இறைமனித உறவின் ஊடகம் என்பதற்கான சான்றுகளே. இவை மட்டுமல்ல மனுவுரு எடுத்த இறைமகன் இயேசுவுக்கு கூட தம்மை புடமிடுவதற்கு ஒரு தனிமையான பாலைவன அனுபவம் தேவையாக இருந்தது. (மத் 4:1-11) தந்தையுடன் உறவாட இயேசு இயற்கையின் இதமான தருணங்களை பலதடவைகள் தேடிச் சென்றார். லூாக் (5:16, 6:12) அவர் தம் இவ்வுலக வாழ்வில் வலிசுமந்த அவ்விறுதி இரவு கூட ஒலிவ மரங்கள் சூழ்ந்த இயற்கையில் தான் கழிகின்றது. (மத். 26:36-46) அனைத்துக்கும் மேலாக இயேசுவின் போதனைகள், அவற்றை மக்களுக்கு விளக்க அவர் கையாண்ட உவமைகள், காட்சிகள் அனைத்தும் அவர் உள்ளத்தில் நிறைந்திருந்த இயற்கையின் அனுபவங்கள். இவரின் இறப்பின் போது நிலம் நடுங்கியது பாறைகள் பிளந்தன நண்பகல் 12.00 மணிக்கு நாடெங்கும் இருள் உண்டாயிற்று என்று விளக்குகின்றன நற்செய்தி நூல்கள் (மத்.27:51) இவை யாவும் இயேசுவுக்கும் இயற்கைக்கும் இடையிலான நெருக்கமான உறவினையே விபரிக்கின்றன.

**இயற்கையும் புனிதர்களும்**

இயற்கையோடு நாம் கொள்ளும் உறவிற்கு ஓர் ஆழமான மீட்கும் வல்லமை உண்டு. விவிலியத்தில் நாம் அடிக்கடி படிக்கின்ற இயற்கையின் அழகும் நன்மைத்தனமும் இறைவனின் மகிமையே என்கிறார் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல். மண்ணையும், நீரையும், வயல்வெளிகளையும் காணும் போதெல்லாம் அவற்றில் நான் படைத்தவரின் நினைவுகளை கண்டு கொண்டேன் என எழுதினார் புனித அவிலா தெரசா. இறைவனை நாம் அனுபவிக்க இயற்கையை விட சிறந்த ஒரு ஊடகம் இருக்கவே முடியாது. இதைத்தான் புனித அகுஸ்தினார், "சிலர் இறைவனை அறிய நூல்களை படிக்கின்றனர். ஆனால் படைப்பெனும் மிகச் சிறந்த நூல் ஒன்று இருக்கிறது அதை கூர்ந்து நோக்கி படித்துக் குறிப்பெடுங்கள். நீங்கள் தேடும் இறைவன் இவற்றை மை கொண்டு எழுதவில்லை. மாறாக தன் கைகொண்டு படைத்தவற்றை உங்களுக்கு அருளினார். இதனை விட சிறந்த குரல் ஒன்று இருக்க முடியுமா?" என்றார். ஆகவே இயற்கையை விட்டு விலகிய ஓர் இறைத் தேடல் சாத்தியமற்றது. எனவே படைத்தவரை ஓரம் கட்டிய எந்தவொரு சுற்றுச்சூழல் முயற்சியும் விழலுக்கிறைத்த நீர் போல் ஆகிவிடும். நம்பிக்கையின் மக்களாகிய நாம் இதனை புரிந்து கொள்ளவேண்டும்.

**சமகால நிதர்சனங்கள்**

நல்ல சமாரியன் உவமையில் சித்தரிக்கப்படும் வழிப்போக்கனின் நிலைதான் இன்று பூமித்தாய்க்கு. கள்வர் கையில் அகப்பட்டு, ஆடைகள் உரியப்பட்டு, அடித்து குற்றுயிராய் விடப்பட்டிருக்கிறாள் (லூாக் 10:25-37) புனித பிரான்சிஸ் அசிசியார் உரிமையோடு உறவு சொல்லி அழைத்த படைப்பு இன்று அவலக்குரல் எழுப்புகிறது. கடல், தரை, மலை என நீண்டு செல்லும் இயற்கை வளங்கள் சுயநலத்தோடு சுரண்டப்படுகின்றன. நீர், வளி, ஒளி போன்ற இயற்கையின் கொடைகள் நாளும் மாசுபடுத்தப்படுகின்றன. பறவைகள் விலங்குகள், மீனினங்கள் என விரிந்து செல்லும் உயிரினப் பன்மயம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. இது போன்ற வன்முறைகளில் ஈடுபடும் போதும் இச்செயல்களை கண்டு கொள்ளாமல் இருக்கும் போதும் நாம் படைப்பிலிருந்தும் படைத்தவரிடமிருந்தும் பிரிந்து செல்கிறோம்.

இது மட்டுமல்ல எம்மைப் போன்ற உறவுகளின் வாழ்வுரிமை மறுக்கப்படும் போதும், கேட்பார் யாருமின்றி மக்கள் கொத்துக் கொத்தாய் கொன்று குவிக்கப்படும் போதும், வாழ்விடம் தேடி வரும் அப்பாவி மக்களுக்கு போரையும் பேராயுத ஆலைகளையும் பொருளாதாரமாக கொண்ட நாடுகள் தம் வாயில்களை மூடும் போதும் மனுக்குலம் இறைவனுக்கு புறமுதுகு காட்டுகின்றது. விவசாய நிலங்கள் ஒழிக்கப்பட்டு, விசாலமான கட்டிடக் காடுகள் அமைப்பது தான் வளர்ச்சி என்ற போலிகள் எமக்கு போதிக்கப் படுகின்றது. கடல் வளங்கள் இயந்திரக் கரம் கொண்டு சூறையாடப்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகள் பல இன்று செல்வந்த நாடுகளின் குப்பைத் தொட்டிகளாகவும் பன்னாட்டு நிறுவனங்களின் நவீன காலனித்துவ களங்களாகவும் மாறியிருக்கின்றன. இப்படியான அன்பு நீதி மற்றும் சமத்துவமற்ற போக்குத்தான் இன்றைய உலகில் ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்குமான இடைவெளியை என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கின்றது. உலகில் வாழும் 3.8 பில்லியன் மக்களுக்கு உரித்தான வளங்கள் வெறுமனே 26 தனிச் செல்வந்தர்களின் கைவசம் உள்ளது. இந்த 3.8 பில்லியன் என்பது உலக ஏழைகளின் மொத்த தொகையில் அரைவாசி (oxfarm அறிக்கை 01.20.2019.) இத் தரவுகளை பார்க்கும் போது "அவர்கள் செல்ல வேண்டாம். நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என்று சீடரைப் பார்த்து கூறிய இயேசுவின் வார்த்தைகள் ஞாபகம் வருகின்றது. (மத்.14:16) "எங்களிடம் இங்கே ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களையும் தவிர வேறொன்றும் இல்லை" என பொறுப்பற்ற முறையில் நாம் கை விரிக்க முடியாது. ஏனெனில் இவை அனைத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்தவ கடமைகளுடன் சமரசம் செய்வது தவறு என்கிறது திரு அவை. (தி.த. 16ம் பெனடிக்ற், Caritas in veritate இல:48,51).

**முடிவுரை**

நியாயமான அரசியல் உரிமைகளுக்காகவும், நீதிக்காகவும், பல இழப்புகளையும் தாண்டி இன்றும் நாம் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பது உண்மைதான். இவற்றோடு இணைத்து, இப் பிரபஞ்சத்தில் நாம் வாழ இன்றுவரை சாத்தியமாய் இருக்கின்ற ஒரேயொரு பொது இல்லமாகிய இப் பூமித்தாயின் பாதுகாப்பிற்காகவும் நாம் உழைக்க வேண்டியிருக்கிறது. நாம் கண்ட வலிகளையும் இழப்புகளையும் வருகின்ற தலைமுறைக்கு அப்படியே கடத்தி விடக் கூடாது. அவர்கள் வாழ முடியாத ஒரு சுற்றுச் சூழலை அவர்களுக்கு நாம் விட்டுச்செல்ல முடியாது. துன்பத்தின் தழைகள் தகர்ந்து, இறப்பின் கல்லறைகள் திறந்து, உயிர்ப்பு என்ற விடுதலை உண்மையாய் பிறக்கும் என்பதனை உறுதி செய்த கிறிஸ்துவின் சீடர்கள் நாம். இதே நம்பிக்கையின் ஆற்றல் கொண்டு உறங்கும் எங்கள் உள்ளங்களை உயிர் பெறச் செய்யவேண்டும். அனைத்துலக சவாலாக உருவெடுத்திருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் எங்கள் மத்தியில் உணரப்பட வேண்டும். இதற்கான சிந்தனை செழுமையும், வளங்களும், வழிமுறைகளும் நம் பழந்தமிழ் மொழியிலும் பண்பாட்டிலும் சிதறிய முத்துக்களாய் பரவிக்கிடக்கின்றன. இவற்றை நாம் நற்செய்தியின் ஒளியிலே புடமிட வேண்டும். இதன் தேவையினை உணர்ந்தவர்களாய் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பரந்த உலகப் பார்வையையும், பல்லுயிர் நேயமும் கொண்டு விண்ணரசு மண்ணில் மலர எம்மையே அர்ப்பணிப்போம்.

*******




# புனிதர் சுவடு

# புனித தந்தை பியோ

இத்தாலி நாட்டில் பெனவெண்டோ மாநிலத்தில் பியெத்ரெல்சினா என்ற சிற்றூரில் ஓராசியோ மரிய ஜியுசெப்பா டி நுன்சியோ போர்ஜியோனே, கிறாசியா மரிய போர்ஜியோனே என்ற தம்பதியருக்கு 1887ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் தேதி புனித பியோ பிறந்தார்.

இவரது குடும்பம் ஏழ்மையான நிலையிலும் ஒழுக்க வாழ்வை கடைப்பிடித்து அன்றாடம் செபிப்பதையும் இறைவன் மீதும் அன்னை மரியா மீதும் ஆழ்ந்த பக்தியையும் கொண்டிருந்தனர். இதுவே பியோ புனிதமான வாழ்வை அமைத்து கொள்ள அடித்தளமாக அமைந்தது. திருமுழுக்கின்போது பெற்றோர் இவருக்கு பிரான்செஸ்கோ என்று பெயரிட்டனர். சிறு வயதில் செபிப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். தீ சொல்லை விரும்பாத பியோ அச்சொல்லை யார் வாயிலிருந்து கேட்க நேர்ந்தால் அதற்காக கண்ணீர் விட்டு அழுது இறைவனிடம் மன்றாடுவார். ‘‘மகனே பிரான்செஸ்கோ என்ன படிக்க வேண்டும் என்று விரும்புகிறாய்’’ என்று கேட்டார் அவர் தந்தை. ‘‘அப்பா நான் ஒரு குருவானவராக வர விரும்புகிறேன்’’ என்று பதில் கூறினார் பியோ. மகனின் படிப்பு செலவுக்காக அமெரிக்கா செல்ல முடிவெடுத்தார் அவர் தந்தை. பியோ, ‘‘அப்பா நான் உங்களுக்காக இறைவனிடம் அதிகமாக செபிக்கிறேன்’’ என்று சொன்னார். 1903ஆம் ஆண்டு துறவற சபையிலே சேர வேண்டுமென்று விருப்பம் கொண்ட இவரை, கப்புச்சின் துறவற சபையில் அர்ப்பணித்து வழியனுப்பினார் அன்னை. 1903ஆம் ஆண்டு ஜனவரி 22ம் நாள் பிரான்சிஸ்கோவுக்கு துறவற ஆடை வழங்கப்பட்டது. தனது பெயரை பியோ (திருத்தந்தை 01வது பயஸ் நினைவாக) என்று பெயர் மாற்றம் செய்தார். இவர் அமைதியையும் ஒறுத்தல் முயற்சிகளையும் கடைப்பிடித்து வந்தார். 1904ஆம் ஆண்டு ஜனவரி 22ம் நாள் கற்பு, கீழ்படிதல், ஏழ்மை என்ற வாக்குறுதிகளை வழங்கினார். 1910ஆம் ஆண்டு கப்புச்சின் துறவற சபை குருவானார்.

1915ஆம் ஆண்டு இவரது உடலில் மறைமுகமாக இயேசுவின் ஐந்து காயங்கள் தோன்றின. இவரது கைகளிலும் கால்களிலும் விலாவிலும் ஏற்பட்ட காயங்களிலிருந்து வேதனையுடன் இரத்தமும் வெளிப்பட்டது. இவர் தேவ அன்னை மீது மிகுந்த பக்தியும் பாசமும் வைத்திருந்தார். 1959ஆம் ஆண்டு பாத்திமா அன்னையின் சொரூபம் இத்தாலிக்கு கொண்டு வரப்பட்ட போது புற்றுநோயால் அவதிப்பட்டு கொண்டிருந்தார். அன்னையின்



சொரூபம் வானூர்தியில் கொண்டுவரப்பட்ட போது ‘‘அன்பு அன்னையே! நீ இத்தாலிக்கு வரும் போது நான் நோயுடன் இருப்பதை அறிவாய், நீ ரொடாந்தோ வரும் போது நான் இன்னும் அதே நோயுடன் துன்புறுவதை காண்கின்றாய், அன்னையே நீ இங்கிருந்து போகும் வேளை நான் முழுவதும் குணம் பெற வேண்டும்’’ என்று கேட்டுக் கொண்டார். அன்னையின் சொரூபத்தோடு வானத்தில் சென்ற வானூர்தி இவரது ஆசிரமத்துக்கு மேலே மும்முறை வானத்தில் வட்டமடித்தது. அதற்கான காரணத்தை தன்னாலேயே உணர முடியவில்லை என்று சொன்னாராம் விமானி.

இவர் பாவிகள் மனமாற்றத்திற்காக தன்னையே மெழுகாக்கி இறைவேண்டல் செய்வார். ஒப்புரவு அருளடையாளம் வழங்குவதில் மனம் சோர்ந்து போகமாட்டார். இறை பிரசன்னத்தால் அடிக்கடி பரவசமடைவார். தீராத நோய்களை குணமாக்கும் வல்லமை, அலகையின் சோதனைகளை வெல்லும் ஆற்றல் தீய எண்ணம் கொண்டவர்களை திருந்திட செய்யும் மனவலிமை உடையவரான இவர் உடல் சோர்வால் வாடினார். 1968 ஆம் ஆண்டு செப்ரம்பர் 23ம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு இயேசுவே மரியே என்று அழைத்தபடியே உயிர் துறந்தார். தந்தை பியோ மரித்த போது அவருக்கு வயது 81. 1968ஆம் ஆண்டு செப்ரம்பர் 26ஆம் நாள் லட்சக்கணக்கான மக்கள் கண்ணீரோடு இவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தந்தை பியோ மிகவும் நேசித்த அருள் மாதா ஆலயத்தில் இவரது உடலை நல்லடக்கம் செய்தனர். திருத்தந்தை புனித 02ஆம் யோண்போல் இவரை 02 மே 1999 அன்று திருப்பீடத்தில் அருளாளராகவும் 16 யூன் 2002 அன்று புனிதராகவும் உயர்த்தினார். இன்று இவரது அழியாத உடலை ஆயிரக் கணக்கான மக்கள் கண்ணீரோடு தரிசித்து ஆசீரையும் அதிசயங்களையும் வாழ்வில் மாற்றங்களையும் பெறுகின்றனர்.

**விண்ணக பயணத்தை நோக்கி**
**செல்லும் இவ்வுலக வாழ்வில்**
**ஆன்மாவுக்கும் அலகைக்குமான**
**பெரும் போராட்டத்தில் அன்பின் புனிதரே**
**எங்கள் ஆன்மாக்களை காத்து கொள்ள**
**ஆன்ம பலம் வேண்டி எமக்காக மன்றாடுவீராக!**

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம் - **மன்னா நிர்வாகம்** -

# திருவழிபாடு



**கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு" (உரோ 12:1) என்கிறார் புனித பவுல்.**

**திருவழிபாட்டின் பொருளையும் முக்கியத்துவத்தையும் அறிந்து ஆர்வமாக உளப்பூர்வமாக திருவழிபாட்டில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்குடன் திருவழிபாடு சார்ந்த கேள்வி பதில்களை தொடர்ச்சியாக இங்கே பதிவிடுகின்றோம்.**

**நன்றி:**
**திருவழிபாடு ஞா. ரோலிங்டன்**

### திருவழிபாட்டின் பொருளும் முக்கியத்துவமும்

**1. “திருவழிபாடு” என்னும் சொல்லின் பொருள் என்ன?**

முதன்மையாக, ‘லித்தூர்ஜியா’(லத்தீன்).˙. ‘லெய்த்துர்கியா’ (கிரேக்கம்) என்னும் சொல்லிற்கு ‘பொதுப் பணி’ அல்லது ‘மக்கள் பணி’ என்பது பொருள். இது இரு கிரேக்கச் சொற்களிலிருந்து (அதாவது, ‘லாவோஸ்’ - மக்கள்; ‘எர்கோன்’ - பணி) பிறந்தது. நாளடைவில், கடவுளுக்குச் செலுத்தும் பொதுவான வழிபாட்டைக் குறிப்பதற்கு திருஅவை இச்சொல்லைப் பயன்படுத்தியது.

**2. “திருவழிபாடு” என்றால் என்ன?**

புகழ்ச்சி நிறைந்த வழிபாட்டைத் திருஅவை (இறைமக்கள் திருக்கூட்டம்) கிறிஸ்து வழியாகக் கடவுளுக்குச் செலுத்துகிறது. இந்த வழிபாடு சில சடங்குகள், சடங்கு முறைகள், அடையாளங்கள், இறைவேண்டல்கள், பாடல்கள், வாசகங்கள் ஆகியவை அடங்கிய தொகுப்பினால் நடைபெறுகிறது. இதுதான் திருவழிபாடு.

**3. “திருவழிபாடு” நமக்கு எதைப் பற்றி எடுத்துரைக்கின்றது?**

கடவுளுக்கு வழிபாடு செலுத்துவதிலும் அருளடையாளங் -களைக் கொண்டாடுவதிலும் திருப்புகழ்மாலை வழியாக வேண்டுதல் புரிவதிலும் அருள்வேண்டல் குறிகளை (அருள்கருவிகளை)ப் பயன்படுத்தவதிலும் திருஅவை

அ) கடவுளின் மீட்புத் திட்டம் பற்றியும்

ஆ) கோவில், திருக்கலங்கள், திருத்துகில்கள், திருஉடைகள், திருநூல்கள், மொழிகள் ஆகியன பற்றியும்

இ) சொல்லும் மன்றாட்டுகள் பற்றியும்

ஈ) நிறைவேற்றப்படுகின்ற சடங்குகளைப் பற்றியும்

உ) நிறைவேற்றுகின்ற இறைப்பணியாளர்களைப் பற்றியும்

ஊ) பங்கேற்கின்ற இறைமக்களைப் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**4. திருவழிபாட்டினால் விளையும் நன்மைகள் யாவை?**

அ) நாம் கடவுளுக்குச் செலுத்த வேண்டிய வழிபாட்டைச் சிறப்பித்து, அதை அவருடைய இறைமாட்சிக்கு ஏற்றதாக மாற்றுகிறது; வழிபாடு செய்யும் அனைவரையும் புனிதப்படுத்துகிறது;

ஆ) நாம் நம்புகின்ற ,றைத் திட்டங்களையும் மறை உண்மைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது; அவற்றை வெளிப்படையாக எடுத்துச் சொல்வதற்குத் தேவையான வழிகளை நமக்குக் கற்பிக்கிறது;

இ) நாம் கடவுளுக்குச் செலுத்த வேண்டிய வழிபாடு, வணக்கம் ஆகிய கடமைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது; அதைத் தகுந்த விதத்தில் செலுத்தவதற்கு ஏற்ற நேரமும் வாய்ப்பும் அளிக்கிறது.

ஈ) இறையருளை மிகுதியாகப் பெறவும் நம்பிக்கையிலும் அன்பிலும் வளர்ச்சி பெறவும் உதவுகிறது;

உ) கிறிஸ்தவ வாழ்வுக்குத் தேவையான, உரிய மறைக்கல்வியை வழங்குகிறது;

ஊ) அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான மனநிலையை நம் உள்ளத்தில் பிறப்பிக்கிறது; அவற்றின் பலன்களை அபரிமிதமாகப் பெற்றுக் கொள்ளவும் உதவி செய்கிறது;

எ) புனிதமிக்க கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்கவும் இறையாட்சி சமுதாயத்தை உருவாக்கி வளர்க்கவும் நம்மை ஊக்குவிக்கிறது;

**5. திருவழிபாட்டில் திருக்கூட்டத்தின் பங்கு என்ன?**

திருவழிபாட்டில் திருக்கூட்டத்தின் பங்கு/பங்கேற்பு என்பது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினுடைய ஒரு மறுமலர்ச்சித் திட்டம் அதாவது நம்பிக்கையாளரை முழுமையாகத் திருவழிபாட்டில் பங்கேற்கச் செய்வதே அச்சங்கத்தின் முக்கிய நோக்கம். இதை உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் போதனை கீழ்வருமாறு தெளிவுப்படுத்துகிறது;

“நம்பிக்கையாளர் திருப்பலிக் கொண்டாட்டத்தில் தூய மக்களித்தினர், கடவுளின் உரிமைச் சொத்து, அரச குருக்களின் கூட்டத்தினர் ஆகின்றனர். இவ்வாறு இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர்; மாசற்ற பலிப்பொருளை அருள்பணியாளர் கைகள் வழியாக மட்டுமன்றி அருள்பணியாளரோடு சேர்ந்தும் ஒப்புக் கொடுக்கின்றனர். தங்களையே கையளிக்கவும் கற்றுக் கொள்கின்றனர்” (எண் 95).

இதைப் படிக்கின்ற பொழுது திருவழிபாட்டில் காணப்படும் அடையாளங்களில் நம்பிக்கையாளரின் திருக்கூட்டமே மிக முக்கியமான அடையாளம் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே திருக்கூட்டத்தின் பங்கு என்பது திருவழிபாட்டில் ஒவ்வொரு சடங்கிலும் அக்கூட்டத்தின் உறுப்பினர்களாகிய நாம் பங்கேற்பது மட்டுமல்லாமல், திருவழிபாடு நம் உள்ளங்களில் ஊடுருவி, அது நம் மனத்தை மாற்றும் விதத்தில் கொண்டாடப்பட வேண்டும். திருவழிபாட்டுக் கொண்டாட்டம் நம் கோவிலின் சுவர்களைத் தாண்டி, புதியஉலகை உருவாக்க நமக்கு இறையாற்றலைத் தருவதாக அமைய வேண்டும். இதுதான் அரச குருக்களின் கூட்டத்தினராகிய நமது பங்கு.

**6. திருவழிபாட்டில் சடங்குகளின் முக்கிய பங்கு என்ன?**

திருவழிபாடு திருச்சடங்குகளால் ஆனது; திருச்சடங்குகளில் பல்வேறு அடையாளங்கள் பயன்படுத்தபடுகின்றன; இந்தச் சடங்குகளும் அடையாளங்களும் தனி மனித ஆன்மிக வளர்ச்சிக்காகவும் திருக்குழுமத்தின் பங்காற்றுவதில் சிறப்பிடம் பெறுகின்றன. இவை இறை அனுபவத்தைப் பெறவும் வெளிப்படுத்தவும் அது பகிர்ந்து கொள்ளப்படவும் காரணிகளாக விளங்குகின்றன.

**7. திருவழிபாட்டில் அடையாளங்களின் பங்கு என்ன?**

அடையாளங்கள் பொருள்களாகவோ செயல்களாகவோ வார்த்தைகளாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக, தண்ணீர். தலைமேல் கைகளை வைத்தல், புனிதப்படுத்தும் வார்த்தைகள் முதலியன. இவை எளிதில் அறிய முடியாத, மறைபொருளான உண்மையை அறிந்து கொள்ள, உணர்ந்துகொள்ள, புரிந்துகொள்ள உதவுகின்றன. இவையே நமக்கும் மறைபொருளானவற்றிற்கும் இடையே நின்று செயல்படுகின்றன. கடவுளைப் பற்றி இன்னும் ஆழமாக அறிந்து, அவரை வழிபடவும் அன்பு செய்யவும் அவருக்கு செவிமடுக்கவும் வழிசெய்கின்றன. கடவுள் மேல் உள்ள நமது நம்பிக்கை வளர காரணமாயும் அமைகின்றன.

**(தொடரும்)**

# சிறுவர் அணியம்

## வண்ணமிட்டு கொண்டாடு

1) நம்மை படைத்து, மீட்டு, வழிநடத்தும் மூவொரு கடவுளை வண்ணமிடு!



மேலேயுள்ள மூவொரு கடவுளட நிழற்படத்திற்கு அழகாக வண்ணமிட்டு அனுப்பி வைக்கும் சிறார்களில் நல்வாய்ப்பு பெறும் ஒருவரின் கைவண்ணம் காட்சிப்படுத்தப்படும்
குறிப்பு: நிழற்படத்தை நீங்களே பிரதியெடுத்து வண்ணமிட வேண்டும்.

## 3. இறைவார்த்தைகளை வரிசைப்படுத்தி எழுதுக

1.

| | | | | |
|---|---|---|---|---|
| எங்கள் | ஆண்டவரே | தந்தை | நீரே | எசாயா 64:8 |

2.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடவுளின் | நீர் | மகன் | வாழும் | மெசியா | மத்தேயு 16:16 |


3.

| | | | | |
|---|---|---|---|---|
| கற்றுத் தருவார் | உங்களுக்கு | துணையாளர் | தூயஆவியாராம் | அனைத்தையும் |
| என் பெயரால் | அனுப்பப் போகிற | தந்தை | யோவான் 14:26 | |

**வாசக நேயர்களே!**
நமது மன்னாவின் பொழிவு சிறந்து விளங்க உங்கள் ஆக்கப்பூர்வமான கருத்துகளும் விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.
காத்திரமானவை “நேயர் நோக்கு” என பதிவிடப்படும்.
- பதிப்பாசிரியர் -

## வழிகாட்டி வாழ்ந்திடு

2) இயேசுவிடம் சென்றடைய இந்த குழந்தைகளுக்கு உதவி செய்வாயா?



## 4. செபத்தைத் தேடிக்கண்டுபிடி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ன் | ய | தூ | ன | ந | ம | ஒ |
| க | வ | ய | ஐ | ள | ஐ | செ |
| ம | ர | ஆ | ஆ | மெ | ன் | கி |
| ச | சூ | வி | வை | து | மே | லே |
| உ | து | யா | த | ந் | தை | ரா |
| லி | ண | ரி | ரெ | உ | டீ | ய |
| சு | ங | ன் | கே | அ | இ | பெ |

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்.



**பாலகரே!**
**காவல்துாதருக்கு செபம் சொல்லுங்கள்**



எனக்கு காவலாயிருக்கிற
இறைவனின் தூதரே. இறையருளால்
உம்மிடத்தில் ஒப்புவிக்கப்பபட்ட எனக்கு
இறை ஒளியைத் தந்து. என்னைத் தீமைகள்
அனைத்திலிருந்தும் காத்து நடத்தி ஆண்டருளும்.
ஆமென்.

# கவிதைக் களரி

## கல்லறைத் தோட்டம்



கார்த்திகை மாதம்
கல்லறைத் தோட்டம்
கண் விழித்துக் காத்திருக்கும்
கம கமவென ஊதுபத்தி
காற்றில் அசையும் சுடராய் மெழுகுவர்த்தி
உறவுகள் தேடிச் சென்று
சொந்த பந்தம் சொல்லி அழ
சோகமயமாகும் தோட்டம்
சென்ற நாள் நினைவுகள்
முகத்திரையை ஈரமாக்கும்
எந்த நாள் என் நாளோ
அந்த நாள் வரை
கல்லறை வருவேன் காலார நடை நடந்து

*யேசுதாசன் யூக்கறிஸ்ரா (ஐடா),*
*புத்திரர் கண்டான், முருங்கன்.*

## அன்பியத்தில் எம் பணி

அகந்தை நீங்கி அன்பியம் வலுப்பெற
ஆதிக் கிறீஸ்தவ பண்புகளை - வாழ்வின்
ஆடையாய் அணிந்து கொண்டு
அன்புறவில் சங்கமிப்போம்.
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வென
ஒருமித்து ஒன்றிணைந்து - திருஅவையின்
ஒன்றிப்பு பங்கேற்பு பணியில்
ஒற்றுமையாய் உழைத்திடுவோம்
அளவற்ற அன்பு இயேசுவின் அன்பு
தன்னுயிர் தியாகம் சொல்லும் கல்வாரி அன்பு
மானிட மகனின் மகத்துவ அன்பு
ஈடாகுமா? எமது இச்சிறிய பணி.
ஆவியின் கொடைகளோ
அருள்மாரி போல பொழியட்டும்
அனுதின வாழ்வில் இறையாட்சி மலரட்டும்
அகிலம் முழுவதும் ஒற்றுமை ஓங்கட்டும்
ஆலமரமாய் எம் அன்பியங்கள் உயரட்டும்

**திருமதி.சீ.எஸ்.எஸ்.குரூஸ் (மத்தியகுழு),**
**பெரியபண்டிவிரிச்சான் பங்கு.**

## நினைக்கவொரு கார்த்திகை - 02



பிறப்பும் இறப்பும் இறையவன் கையில்
கேட்டு பெறுவதில்லை பிறப்பு
நினைக்க வருவதில்லை இறப்பு
கண் விட்டு அகன்ற
காலம் கடந்து சென்ற
அன்பர்களை உறவுகளை நினைக்க செபிக்க
அன்னை திருஅவை தந்த மாதம் கார்த்திகை
அதிலொரு நாளே கார்த்திகை 02

நினையாத உறவையும் நினைவிருத்த
அழைக்கிறாள் திருஅவை
உறவுகள் எல்லாம் உன்னதமே - அவர்
உயிர் நீத்த பிறகு அது புரியும்
அருமை பெருமைகள் தெரியும்



சொல்லிட முடியாத சோகத்துடன்
உறவுக்காய் ஏங்குவோர் எத்தனையோ?
இறந்த நம் உறவுகள் அத்தனை பேரும்
இறைபதம் அடைந்து இளைப்பாற
இறைவேண்டல் செய்வோம் இறைமக்களே!
நிலைவாழ்வு நமக்கும் மேலுண்டு ஒருநாள்
நினைவிற் கொண்டு வாழ்வோமே!

**P. அன்ரனி குறுஸ் சரன்சலாமேரி.**
**புனித அன்னை தெரேசா ஆலயம். துட்டுவாகை.**

## விண்வாழ்வுப் பயணப்பாதை

விண்ணக வாழ்வில் விருப்பங் கொண்டு
மண்ணை துறந்த மாந்தரே - நீவீர்
விண்ணேறிச் சென்ற விசித்திரம் தான் என்னவோ?
மண்தரா இன்பம் விண் பேரின்பமல்லவோ?

மண்ணுலகில் நீங்கள் மகிழ்ந்த காலம்
மறக்க முடியுமோ?
மரணத்தை அரவணைத்து முழு விடியலை
தேடியதேனோ?
கொடியிலே காய்த்த காய் கனிந்து சிதைந்து
மாயமாவது போலும்
குவலய உடலுயிரின் நிலையாமை நிச்சயம்
அது நிச்சயம்

அழகான நினைவுகளை அழித்திட முடியுமோ?
நிழலோடு வாழும் வாழ்வு நிம்மதி அளிக்குமோ?
நிஜம் இன்றிப் போனாலும் நினைவுகள் அழியுமோ?
உறவின்றிப் போனாலும் உணர்வுகள் மறக்குமோ?

விண்வாழ்வுப் பயணிகளே நீங்கள்!
விண்ணகத் தேவனின் அடைக்கலத்தில்
முடிவிலாக் காலமெலாம் அமர்ந்து
மூவொரு இறைவனில் முழுமையாய் நிலைத்திருங்கள்!

**அ. ஜஸ்மின் ஷறோன்,**
**ஆவணம், நானாட்டான்.**

## பள்ளிக்காலம்

துள்ளி திரிந்த காலம் அது
பட்டாம் பூச்சிப் பருவம் அது
எம் தோழமை சிறகடித்த நேரம் அது
திருட்டுத் தீனி உண்ட வேளை அது

பள்ளிக் காலக் குறும்புகள் ஏராளம்
கற்றுக் கொண்ட பாடங்கள் தாராளம்
பட்டறிவுகள் தந்ததோ வலிகள் அல்ல
பக்குவமான வழிகள், வளங்கள்

அவை உள்ளத்தில் நீங்காத நினைவுகள்
ஆசிரியர் தினத்திலே ஆட்டம் பாட்டம்
விளையாட்டு போட்டியோ வெகு கொண்டாட்டம்
அணிநடை தனிஅழகு அலங்கார பந்தலோ மிடுக்கு

நினைக்க நினைக்க நெஞ்சம் நெகிழுதே
கடந்த காலம் திரும்புமோ – அவை
நிகழும் காலமாகுமோ எண்ணிப் பார்த்து களிகூர
தம்பி தங்காய் பள்ளிக் காலத்தை பயன்படுத்து



பயஸ் ஆனந்தகுமார் மேரி பிளன்சிக்கா,
வெற்றி மக்கள் குடியிருப்பு,
50 வீட்டுத்திட்டம், பேசாலை.

# அறிவுச் சாகரம்

# எதற்கும் தற்கொலை ஒரு தீர்வல்ல

**கனிஷ்ரா ஜெயக்காந்தன் - முருங்கன் பிட்டி,**
**ஊடகக் கற்கைகள் துறை மாணவி,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

தற்கால சூழ்நிலையில் இலங்கையை பொறுத்தவரையில் அதிகரித்து வருகின்ற சமூகப்பிரச்சினையாக தற்கொலைகள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக மாணவர்களின் தற்கொலை வீதம் சடுதியாக அதிகரித்து வருகிறது. இதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் விதிவிலக்கல்ல. அந்த வகையில் பார்க்கும்போது படித்து சமூகத்தினை உயர்த்த வேண்டிய நபர்களாக மாற வேண்டியவர்கள், இவ்வாறு தவறான முடிவெடுப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக மாறி உள்ளது.

பல ஆசைகளோடும் கனவுகளோடும் பல்கலைக் கழகத்திற்குள் நுழையும் மாணவர்கள் இடைநடுவே இவ்வாறு செயல்படுவதன் காரணமாக நம் சமூகத்தின் மத்தியில் பல்கலைக்கழக மாணவர்களைப்பற்றி தப்பான அபிப்பிராயங்கள் ஏற்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் என்பது முற்றிலும் புதிய சூழலை கொண்ட உலகம். இங்கு எல்லாமே புதிதாக தான் இருக்கும் என்று அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வோண்டும். அதிலும் குறிப்பாக பொதுமுக மாணவர்கள் அனைவரிடமும் இந்த மனநிலை தோற்றம் பெற வேண்டும். பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சவால்களை நாம் தனியாகத்தான் சமாளிக்க வேண்டும். இவ்வளவு காலமும் பெற்றோரின் அரவணைப்பில் இருந்த நாம் முழுமையாக மனிதனாக மாறி, தொழில் உலகில் நுழைவதற்காகவும் பெற்றோரின் ஆசைகள் பலவற்றை நிறைவேற்றவுமே பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தோம் என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழகம் நுழையும் மாணவரிடம் சமூகம் பல நம்பிக்கைகளை வைத்திருக்கின்றது. அதனை நாம் கட்டிக்காக்க வேண்டும். ஆனால் இன்றைய காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் சவால்களை சமாளிக்க துணிவின்றி தற்கொலையை தமது வாழ்வின் ஆயுதமாக பயன்படுத்துவது மிகவும் கவலைக்குரிய விடயமாக காணப்படுகிறது.

இதற்கான காரணங்களாக மாணவர்களிடையே அதிகரித்துள்ள மன அழுத்தம், சரியான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாமல் போவது, ஒருவருடன் ஒருவரை ஒப்பிட்டு பேசுதல், ஏமாற்றங்கள், தோல்விகள், பாடசாலை கற்றல் கற்பித்தல் முறைக்கும் பல்கலைக்கழக கற்றல்




கற்பித்தல் முறைக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள், பொருளாதார ரீதியிலான பிரச்சனைகள், குடும்ப வறுமை, ஆங்கில அறிவின்மை, குடும்பத்தினரை பிரிந்த சோகம், இளம் வயது காதல், பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்படும் முரண்பாடுகள், ஒழுக்க கட்டுப்பாடுகள் போன்ற பலவற்றை கூறிக் கொண்டே போகலாம்.

மேலும் ஏன் இவர்கள் தவறான முடிவெடுக்க விளைகிறார்கள் என ஆழமாக எண்ணும் போது பின்வரும் காரணங்களை கூறலாம். பிள்ளைகளை சிறுவயதில் இருந்தே தோல்வியை ஏற்றுக்கொள்ள பழக்காமை, சவால்களை சமாளிக்க பெற்றோர் துணை புரியாமை, சரியான முறையில் தீர்மானம் மேற்கொள்ள பழக்கப்படுத்திக் கொள்ளாமை, பரீட்சை குறித்த பயம், உடலில் ஏற்படுகின்ற ஹார்மோன் மாற்றங்களை சரியாக உணர்ந்து செயல்படாமை போன்றன.

இவை அனைத்திற்கும் தீர்வாக மாணவர்கள் மத்தியில் தமது உணர்ச்சிகளை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்ற அறிவை முதலில் வழங்க வேண்டும். சரியான முறையில் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். புதிய சூழலில் பெற்றோரை விட்டு தனியாக வாழ ஆரம்பிக்கும் பிள்ளைகளுக்கு பெற்றோர் நட்பு ரீதியான உறவினை பேண வேண்டும். பிள்ளைகளுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டும், பெற்றோர் பிள்ளைகளின் செயற்பாடுகளுக்கு தம்மாலான ஆதரவுகளை வழங்க வேண்டும். மாணவர்கள் தோல்விகளை கண்டு துவண்டு விடாது நம்பிக்கையுடன் வாழ உற்சாகமூட்ட வேண்டும்.

விடாமுயற்சியுடன் தனது பல்கலைக்கழக கனவை நனவாக்க வேண்டும் என்ற உணர்வை உருவாக்க வேண்டும். சோதனைகளையும் வலிகளையும் கடந்து பெற்றோர் தம்மை கல்வி கற்க வைப்பதற்கான நோக்கத்தையும், காரணத்தையும் புரிந்து செயல்பட மாணவர்கள் பழக வேண்டும்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

அறிவுச்சாகரப் பகுதியில் பதிவிட மாணவர் வலுவூட்டலுக்கான, பாடசாலை கல்வி சார்ந்த நல்ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

**- மன்னா நிர்வாகம் -**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.244
## சீராக்கின் ஞானம் 1-30 வரை

உங்கள் விடைகளை மார்கழி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று நல்வாய்ப்பாளர்களுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப் பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 03 | ✸ | | 04 | | 05 |
| | | | 06 | | | 07 | | 08 | |
| | | | | ✸ | ✸ | | | | 09 |
| | | 10 | 11 | | | | 12 | | |
| ✸ | | 13 | | | 14 | | | | 15 |
| | | | | ✸ | | | | | 16 |
| | ✸ | | | | | 17 | | 18 | 19 |
| | | | | | ✸ | | | | |
| | 20 | 21 | 22 | | | | 23 | | |
| 24 | | | ✸ | 25 | | | | | |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. உங்கள் தந்தையாகிய எனக்குச் ................ சாயுங்கள்.
4. நான் அழகு அளித்திடும்___செல்வத்தினுடைய .........கள், என் மலர்கள்.
6. சமவெளியெங்கும் வளமான வயலைத் ....................
10. உன் வழிகளைச் சீர்படுத்து, ................ நம்பிக்கைகொள்.
12. தாகம் கொண்ட___போன்று ...................... தன் வாயைத் திறப்பாள்.
13. ................ கணவரை___அவருக்கு___உருவாக்கும்.
22. கன்னிப் ................ உற்றுநோக்காதே.
24. நீ ................ நிலையில்___நண்பர்களாய் இருப்பார்கள்.
25. அவர்களுக்குப் பதிலாக ................ அமர்த்துகிறார்.

**வலமிருந்து இடம்**

5. என் ................ வயிறார உண்ணுங்கள்.
8. அறிவுக்கூர்மை கொண்டோரின் பேச்சு .......... தருகின்றது.
9. பொய் பேசுதல் மனிதருக்கு அருவருக்கத்தக்க ................ ஆகும்.
15. ................ நிலவுபோல மாறுபடுவர்.
16. அறிவிலார் சிந்திக்குமுன் ................
18. கண்ணியினின்று தப்பியோடும் ............ போல் ஓடிவிட்டார்.

**மேலிருந்து கீழ்**

1. அன்னையரை மேன்மைப்படுத்துவோர் ............................... திரட்டி___ஒப்பாவார்.
2. ஆண்டவர் உன்னைத் தண்டியாமல் ................ .
3. ................ பனிபோன்று மண்ணுலகை மூடிக்கொண்டேன்.
5. மனிதரின் ................ கண்டுவிடுமோ___அஞ்சுகிறார்கள்.
7. அப்போது உன் வீட்டாரின் ................... ச் சொற்களை நீ கேட்க மாட்டாய்.
8. ................ ப் பற்றுள்ளோர்மீது அதற்கு ஆற்றலில்லை.
10. ................ ப் பணி செய்வோர்___புரிகின்றனர்.
14. மூடரின் உள்ளம் ஓட்டைக் ................ போன்றது.
17. உன்னத இறைவன்___நினைத்துப் ................
18. அவரது படைத்திரள்___தமது .................................. யை எடுத்துரைக்கிறது.
19. தங்களுக்கு எதிராகவே குற்றம் .............. நீதிமான்களென யாரே கணிப்பர்?

**கீழிருந்து மேல்**

8. ஒருகால் அதைச் செய்திருந்தாலும் ................ மேலாவது செய்யாதிருப்பார்கள்.
10. ஆண்டவரிடம் கொள்ளும் ............................... மாட்சியும் பெருமையுமாகும்.
11. உயர் வானங்களில் நான் வாழ்ந்து ................
12. அதன் நுகம் இரும்பு நுகம், ...................... சங்கிலிகள் வெண்கலச் சங்கிலிகள்.
17. தக்க நேரம் ................
18. புறங்கூறுவோர் தங்களையே .............. படுத்திக்கொள்வர்.
20. ................ முன் உன்னையே___கொள்ளாதே.
21. உன் தகுதிக்கு ஏற்ப உன்னையே நீ ................
22. ................ அழகால் பிறழ்ந்துள்ளனர்.
23. அடுத்திருப்பவருக்கு___தேவைகளில் ................ கொடு.
24. உன் செல்வங்களில் ................ வைக்காதே.
25. உண்மையான___ஓபீர் நாட்டுப் பொன்னுக்காகவும் .......... மாற்றாதே.

### விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 242 சரியான விடைகளை அனுப்பியவர்களில்
பரிசுபெறும் மூன்று நல்வாய்ப்பாளர்கள்:

**முதலாம் பரிசு:**
செல்வி வயலட் யோண்,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:**
S. ஆன் றெபேக்கா,
எமில்நகர்.

**மூன்றாம் பரிசு:**
ஆன் ஸ்ரேசி ரூபறாஜ்,
பள்ளிமுனை.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 44 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 43 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.242ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. A. பெபிஷா, புதுக்கமம்.
2. A. அபி, புதுக்கமம்.
3. ச.ஜெயா, எழுத்தூர்.
4. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம்.
5. அகுஸ்தீன் இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர்.
6. றூ. மேரி பிறக்சி டயஸ், வங்காலை.
7. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா, வங்காலை.
8. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா, வங்காலை.
9. றூ. ஹறிஸ்மா டலிமா, வங்காலை.
10. றபேக்கா பற்றிக், சின்னக்கடை.
11. G. ஜொகிஷா, சிறுத்தோப்பு
12. லூ. ஆன் ஷெரா பெர்னாண்டோ, முத்தரிப்புத்துறை.
13. S. செபமாலை மார்க், வங்காலை.
14. ம.நெரோஜன், கீரி.
15. T.S. லீலாவதி, சாந்திபுரம்.
16. ச. ஜஸ்மின் கசில், மடுக்கரை.
17. அ. இனற் றுக்சனா, அடம்பன்.
18. அ. ராஜிலி, பெற்றா.
19. யோ. யூடிற் டலிமா, வங்காலை.
20. டா. மேரி யோசேப்பின், பள்ளிமுனை கிழக்கு.
21. யோ. கமில்ராஜ், கீரி.
22. S. நோபிள், எமில்நகர்.
23. S. ஆன் தெபோறா, எமில்நகர்.
24. J. சாரா, எமில்நகர்.
25. L. றியான் சட்விக், எமில்நகர்.
26. T. மிறோன் றோச், பள்ளிமுனை.
27. M. பிளண்ரீனா, சின்னக்கடை.
28. X. குணமணி, பெரியகடை.
29. ரவிசங்கர் சறோஜினி, ஜோசப்வாஸ் நகர்.
30. R. எமி பிகிறாடோ, பள்ளிமுனை.
31. லிவி றொபின்சன் பிகிறாடோ, பள்ளிமுனை.
32. ரேச்சல் தேவநேசன், பள்ளிமுனை.
33. ரேறியன் தேவநேசன், பள்ளிமுனை.
34. R. ஜெகநாதன், மடுக்கரை.
35. குணாளன் மக்ஸ்வெல், அளவக்கை.
36. குணாளன் அபினாஷ், அளவக்கை.
37. வின்சன் யோகவதி, பெரியநீலாசேனை.
38. சந்தியோகு போல் றொபின்சன், பெரியநீலாசனை.
39. அன்ரன் ஜெயக்குமார் அபிசான், தோட்டவெளி.
40. அன்ரன் ஜெயக்குமார் அபர்ணா, தோட்டவெளி.

1ம் பக்கத் தொடர்ச்சி

### மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி...

இத்திட்டமிடல் மாநாட்டின் கருப்பொருளாகிய செபம் என்பது குடும்பங்களில், இளையோரில், சிறுவரில் மற்றும் அன்பியங்களில் எத்தகைய செயற்திறனுக்கான நோக்கும் போக்கும் கொண்டுள்ளது பற்றி முறையே அருட்பணியாளர்கள் ஜெறால்ட் றொசாய்றோ அமதி, அ. விக்ரர் சோசை, அ.யூட் குரூஸ், அ.அந்தோனிதாஸ் டலிமா ஆகியோர் காணொளி மற்றும் காகித ஊடகங்கள் வாயிலாக கருத்துரைகள் ஆற்றினர்.

ஒவ்வொரு உரைகளின் பின்னரும் பத்து குழுக்களில், தயார்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்ட கேள்விகள் கலந்துரையாடப்பட்டு பதில்கள் முன்வைக்கப்பட்டன. இறுதி அமர்வில் அனைத்து முன்மொழிவுகளும் மேய்ப்புப்பணித் திட்டமிடல் செயலரினால் தொகுக்கப்பட்டு 2024ஆம் ஆண்டிற்குரிய மேய்ப்புப்பணித்திட்டங்கள் முன்னுரிமைப் படுத்தப்பட்டன.

காலை மாலைச் செபங்கள், திருப்பலிகள், கருத்துரைகள், குழு ஆய்வுகள், தொகுப்புரைகள், ஆயரின் சிறப்புரை என நிகழ்ந்த மன்னார் மறைமாவட்ட திட்டமிடல் மாநாட்டில் ஆயர், மறைமாவட்ட குருக்கள், மறைமாவட்டத்தில் பணியாற்றும் இருபால் துறவியரின் பிரதிநிதிகள், பங்குப் பிரதிநிதிகள், மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்புக்குரியவர்கள் என பலர் பங்கேற்றிருந்தனர்.

சிறப்பாக நடந்து முடிந்த இம்மறைமாவட்ட திட்டமிடல் மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவினரும் குறிப்பாக மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழச் செயலர் அருட்பணி. அ.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அவர்களும் வெகுவான பாராட்டுக்குரியவர்கள்.


## மன்னா வாசகர்களே!

மன்னா பத்திரிகைக்கான பணத்தை
காலம் தாமதிக்காமல் உடனடியாக
வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை
மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


### 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1952 * 05 * 09
இறப்பு 2009 * 11 * 17



**மோசேஸ் மொத்தம் தர்மதாசன்**
(மாந்தை தெற்கு விவாகம், இறப்பு, பிறப்பு பதிவாளர், சமாதான நீதவான்)
உயிர்த்தராசன் குளம், முருங்கன்.

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று - இன்று காணாமல் போனதெங்கே? நீ காட்டிய அன்பு வழியில் இன்று நாங்கள் கால் பதித்து நடக்கின்றோம்... உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற தினமும் இறைவனை வேண்டியே நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1951 ¤ 10 ¤ 24
விண்ணில் 2022 ¤ 12 ¤ 17



**திருமதி. அ. மேரி ஜசிந்தா (வனஜா)**
பனங்கட்டு கொட்டு கிழக்கு, மன்னார்.

ஓராண்டு கடந்தாலும் எம் மனக் கண்ணில் - உம் அழகு வதனம் மறையவில்லையே தாயே மறுமுறை பிறந்தாலும் நீங்கள் மட்டுமே எங்கள் அம்மாவாக கிடைக்க இறைவனை வேண்டுகிறோம் உமது ஆன்மாவை இறைவனிடம் விழிகளில் நீர் கசிய ஒப்படைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1954 ◆ 06 ◆ 23
உதிர்வு 2022 ◆ 12 ◆ 04



**அமரர். திருமதி. பற்றிமா றோஸ் நவரெட்ணம்**
குழந்தையேசுபுரம் மன்னார்

எமதருமை அம்மாவே ! எம் குடும்பத்தின் குலவிளக்கே நானிலத்தில் மகத்துவமாய் வாழ்ந்தீரே - எம் வாழ்வு சிறந்திட வழிகாட்டினீரே மண்ணக வாழ்வு போதுமென்று விண்ணக வாழ்வில் சேர்ந்தீரே எம்மை விட்டு ஓராண்டு சென்றாலும் மறையாது உங்களின் நினைவு. நீங்கள் என்றும் ஆண்டவன் சந்நிதியில் இன்புற்று அமைதிபெற எந்நாளும் நாம் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1950 ♣ 02 ♣ 15
இறப்பு 2023 ♣ 11 ♣ 08



**அமரர். சூசையின் பத்மினி**
பிறப்பிடம்: சின்னக்கடை, மன்னார்.
வசிப்பிடம்: முதலியார்குளம், செட்டிகுளம்.

அன்பின் திருவுருவாய் அவதரித்த எம் அன்புறவே, அச்சாணியாய் இருந்தீர் எம் உறவுகள் அனைவர்க்கும் - காலக் கொடுமையதன் காரணத்தை நாமறியோம் என்றும் உம் அழியாத நினைவுகளுடன் இறைவனிடத்தில் உம் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கிறோம்..

பிரிவால் துயருறும் : குரும்பத்தினர், உறவினர்




# நினைவு கூருகின்றோம்..!

## 31ம் நாள் நினைவஞ்சலி



**அமரர். நாகலிங்கம் சிறீஸ்கந்தராஜா**
**(சிறி கொண்டக்ரர்)**

பிரதான வீதி மடுறோட்

**மண்ணகம்** 1943.08.19 — **விண்ணகம்** 2023.10.10

பாசத்துடன் பழகுவதில்
பண்பாளர் நீங்கள் ஐயா!
நேசத்துடன் பழகுவதில்
நெஞ்சம் நிறைந்த எம் ஐயா!
குருவிக் கூட்டின் குலவிளக்காய்
குடும்பத்தைக் காத்தவர் நீங்கள் ஐயா!
எம் நெஞ்சங்கள் பதை பதைக்க
நீங்கள் சென்ற இடம் எங்கையா?
கூடு இழந்த பறவைகளாய்
அலைகின்றோம் உம் இழப்பால் எம் ஐயா!
பரமனிடம் வேண்டுகின்றோம்.
எம் ஐயாவுக்கும் நிலை வாழ்வில்
வாழ இடம் கொடுங்களென்று.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 20 - 03 - 1937



**உதிர்வு** 16 - 11 - 2022

**அமரர். மரிசால் ஞானப்பு**
**கள்ளிகட்டைக்காடு**

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று
இன்று காணாமல் போனதெங்கே? நீ காட்டிய அன்பு வழியில்
இன்று நாங்கள் கால் பதித்து நடக்கின்றோம்.
உன் புன்சிரிப்பான பூ முகம் பூமியில் இனி வருமோ
நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்.
காலம் ஏன் எம்முடன் உம்மை கனதூரம் கொண்டு செல்லவில்லை.
பாதி வழியில் விட்டு சென்றதனால்
பாவிகள் நாம் பரிதவித்து துடிக்கின்றோம்.
சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக

பிரிவால் துயருறும்.
கணவன், பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது"

**பிறப்பு** 1972 - 12 - 12



**இறப்பு** 2021 - 11 - 17

**அமரர். பர்ணபாஸ் சந்தான் ததேயு (ஜோண்)**
**பொன்திவு கண்டல்**

எமதருமை அன்பு அப்பாவே! மண்ணக வாழ்வு போதுமென்று
விண்ணக வாழ்வில் விருப்பம் கொண்டீரே. எம்வாழ்வு சிறந்திட,
தூரதேசம் சென்று உழைத்து மனநிறைவின்றி
பாதியில் விட்டுச் சென்றீர்களே இதனை நாம் எப்படி மறப்போம்.
எம்மை விட்டு நீர் பிரிந்து ஈராண்டு சென்றாலும்
உம் செயல்களும், புன்னகை பூத்த முகமும் மனத்திரையில்
என்றுமே நிலைத்துள்ளது அப்பா
நீங்கள் என்றுமே ஆண்டவன் சந்நிதியில் இன்புற்று
அமைதி பெற நாம் தினமும் வேண்டுகின்றோம்.

பிரிவின் துயரில்: அன்பு அம்மா, பாசமிகு மனைவி, பிள்ளைகள், அன்புச் சகோதரன் குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன" (சாஞா 3:1)



**திரு. நீக்கிலான் இராயப்பு குரூஸ்**
முன்னாள் முகாமையாளர் ப.நோ.கூ. சங்கம்,
வங்காலை - 06

**மண்ணில்** 15.01.1936 — **விண்ணில்** 05.11.2022

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் விளைநிலமாய்
அமைதியின் உறைவிடமாய் பாரினிலே நீர் வாழ்ந்து வந்தீர்.
இரக்கமும், இறைபற்றும், ஊக்கமும் பிறருக்கு உதவும்
உத்தம குணமும் உம் முத்தான சொத்துக்களப்பா...
சின்னஞ் சிறு வயதினிலே நாங்கள் தாயை இழந்து
பரிதவித்த வேளையிலே தாயின் கடமைகளையும்
தலைமேற் சுமந்து நாங்கள் சீர்பெற
உங்கள் ஆலோசனைகளும், அறிவுரைகளும்,
கடின உழைப்பும் எம் வாழ்வை வளமாக்கியதே...
எப்படியப்பா உங்கள் தியாகத்தை மறப்பது.
ஆயிரம் உறவுகள் எம் அருகே இருந்தாலும் அப்பா
உங்கள் அன்பிற்காய் ஏங்குகிறது எம் மனங்கள்.
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதி பெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 37ம் 5ம் ஆண்டு நினைவலைகள்

**பிறப்பு** 24.12.1923
**இறப்பு** 13.01.1986



**பிறப்பு** 23.03.1933
**இறப்பு** 16.11.2018

**அமரர். R.K. யேசுரட்ணம்** — **அமரர். K.J. பவுலீனம்மா**

வதிவிடம் : செபஸ்ரியார் கோவிலடி, வவுனியா. பிறப்பிடம் : இறம்பைக்குளம், வவுனியா.

மண்ணில் எம்மை விட்டுச்சென்று விண்ணில் இருந்து
எம்மை பாதுகாத்து வழிநடத்தும் எம்பெற்றோருக்கு எமது அஞ்சலிகள்

பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள், பூட்டக்குழந்தைகள், உறவினர்கள்.

## 18ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 10. 10. 1934
இறப்பு: 18. 11. 2005

**திருமதி. பேதுரு செபமணி அருளம்மா**
**(முருங்கன் கமம், முருங்கன்)**

பூவுலக வாழ்வைத் துறந்து. மறுவுலக வாழ்வைத்
தேடிச்சென்ற அம்மா!
18 ஆண்டுகள் உருண்டோடிச் சென்றாலும்,
உங்களைப் பிரிந்த துயரத்தின் அதிர்வுகள்
நெஞ்சின் அலைகளாக ஓயாது
ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.
எங்கள் குடும்பத்தின் மூத்த தலைவியாய் இருந்து
அன்பையும், பாசத்தையும், அரவணைப்பையும் வழங்கி.
அரியபல சேவைகளைச் செய்து,
அர்ப்பணிப்புக்கு வரைவிலக்கணமாகத் திகழ்ந்த
உங்களை நாங்கள், மறவோம் அம்மா!
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதானத்தில்
நித்திய சாந்தி அடைவதாக!

பிரிவால் நினைந்துருகும் : அன்புக்கணவன், பாசமுள்ள பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.